அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப் பைகளைக் கொடுத்து
இனாம் பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா தொழிலகம்
இணுவில்!
(பி-9106)

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கட் விலை 50/-
நான்கு மாதக் குழந்தைகளிலிருந்து கொடுக்கக் கூடியது
அண்ணா தொழிலகம்
இணுவில்
(பி-9106)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 06 ஞாயிற்றுக்கிழமை (23 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 331

வடக்கை அபிவிருத்தி செய்வதற்கு அரசின் ஓராண்டுத் திட்டம் தயார்!

புலிக்கொடிக்கு லயனல் எதிர்ப்பு இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 23

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் நடந்த முதற் கட்டப் பேச்சின்போது பேச்சுவார்த்தை நடைபெற்ற மண்டபத்தில் தமிழீழக் கொடி வைக்கப்பட்டிருந்தமைக்குத் தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் தாக்குதல்! 2அதிரடிப் படையினர் பலி!!

ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்கள் சிலவற்றைப் புலிகள் கைப்பற்றினர்.

தும்பன்கேணி முகாமில் இருந்து திக்கோடை என்னும் இடத்துக்குச் சென்று கொண்டிருந்த 10 பேர் அடங்கிய அதிரடிப்படை அணி மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

நாளை நடக்கும் பேச்சின் போது புலிகள் பிரதிநிதிகளிடம் விவரம்

கொழும்பு, ஒக்ரோபர் 23

வடக்கை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஒரு வருடத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. வடக்கு மக்களின் நாளாந்த வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மாற்றுவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்று அரசு அறிவித்துள்ளது.

அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்போது—

அரசின் உத்தேச திட்டம் குறித்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்படும் என்று— அரசாங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை சமாதானப் பேச்சுக்கள் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்காவது நீடிக்கும் என்று அரசாங்க வட்டாரங்களில் கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல; அரசியல் தீர்வு காண்பதே சிறந்த மார்க்கம். அந்த வழியில் செல்வதற்கு அரசுமுனைந்திருப்பது வரவேற்கத்தக்கது — என்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்குச் செல்லும் பத்திரிகையாளர்கள் பலர் நேற்று அங்கு புறப்படுவதற்கு முன்னர் இரத்மலானை விமான நிலையத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்தனர்.

கொழும்பு சிங்களப் பத்திரிகையைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் —

யாழ்ப்பாண மக்கள் சமாதானத்துக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களின் அந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். கடந்த காலங்களில் இருந்து நாம் படிப்பினைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அரசியல் தீர்வை நாடி வேகமாக செயற்பட வேண்டும் என்றார்.

இன்னொரு பத்திரிகையாளர் கருத்துத் தெரிவிக்கையில்—

பேச்சுவார்த்தைகள் ஆகக்குறைந்தது 3 மாதங்களுக்காவது நீடிக்கும் என்று அரசாங்க தரப்பில் மதிப்பிடப்படுவதாகத் தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டிலிருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றின் செய்தியாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இந்த நாட்டில் பெருமளவில் இரத்தம் சிந்தப்பட்டுள்ளதால் சமாதானத்தை உருவாக்குவது ஒரு நீண்ட செயற்பாடாகவே அமையும்.

சமாதானத்தை அடைய வேண்டும் என்பதில் இருதரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

குடும்ப ஆலோசனை சபை ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 23

தமிழீழ நீதி நிர்வாகத் துறையினரால் குடும்ப ஆலோசனைச் சபை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் வைபவம் நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. இ.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார்.

பெயர்ப்பலகை தமிழீழ மருத்துவப் பொறுப்பாளர் திரு. பா. மனோஜ் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து நீதி நிர்வாகத் துறை துணைப் பொறுப்பாளர் திரு. சி. திலகர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார். தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டி ஆலோசனை சபையினைத் திறந்து வைத்தார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் முன்னிலையிலும், யாழ். மாவட்ட நீதியாளர் திரு. சி. இசையமுதன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

செய்தியாளர் குழு பலாலி புறப்பட்டது

இன்று யாழ்நகர் வரும்

விடுதலைப் புலிகளுக்கும், அரச பிரதிநிதிகளுக்கும் இடையே நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ள பேச்சுக்கள் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் குழு ஒன்று நேற்று மாலை இரத்மலானையில் இருந்து விமானம் மூலம் பலாலி புறப்பட்டது.

30 பேர் கொண்ட இந்தக் குழுவினர் இன்று மாலை யாழ்நகர் வந்தடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-ஐ-4)

கொழும்பில் இன்று சமாதான ஊர்வலம்

கொழும்பு, ஒக். 23

சமாதானத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகளுக்கு ஆதரவு தெரிவித்து சர்வ சமய சமாதானக்குழு ஏற்பாடு செய்துள்ள மாபெரும் சமாதான ஊர்வலம் ஒன்று இன்று பிற்பகல் கொழும்பு ஹைட் பார்க்கில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஊர்வலத்தில் கம்போடியா நாட்டின் உயர் சங்க நாயக்கர் சங்கைக்குரிய சம்ரச் பிற மகா ஹாநந்த தேரரும், கலந்து கொள்வார்.

ஊர்வலம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் முடிவடைந்ததும் அங்கு அவர் தர்ம உபதேசம் செய்வார்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து சமாதானத்துக்கான மக்கள் இயக்கம் ஒற்றைக் கட்டி எழுப்புவதற்கான மாநாடு ஒன்று நாளை திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. கம்போடியாவின் உயர் சங்கநாயக்கரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார். (இ-ஐ)

ஆயுதக் கொள்வனவை ரத்துச் செய்து படையினர் உயிரிழப்பை தடுத்தேன்!

சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 23

ரஷ்யாவில் இருந்து பயன்படுத்த முடியாத போலி ஆயுதங்களை கொள்வனவு செய்ய ஐ.தே.க. அரசு கைச்சாத்திட்ட உடன்படிக்கையை நான் ரத்துச் செய்ததினால், போர்முனையில் எமது படையினர் அநியாயமாக உயிரிழப்பதைத் தடுத்துள்ளேன்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா வெலிகமவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ஆயிரக்கணக்கில் எமது இளைஞர்களை கொல்லும் வடக்கு — கிழக்கு யுத்தத்துக்கு தீர்வு காணுவதை சிலர் எதிர்க்கின்றார்கள். இந்த யுத்தத்தினால் பணம் உழைப்பவர்களே அவர்கள் ஆவர்.

இதேவேளை தென்பகுதி மற்றும் இடங்களைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

எமது படையினருக்கென ரஷ்யாவில் இருந்து ஆயுதங்களைத் தருவிக்கும் உடன்படிக்கையை நான் ரத்துச் செய்து விட்டேன். இந்த உடன்படிக்கையை நான் ரத்துச் செய்யாது இருந்திருப்பின் போர் முனையில் எமது படையினர் வீணே கொல்லப்பட்டிருப்பர். காரணம், ரஷ்ய ஆயுதங்கள் அனைத்தும் பிரயோசனமற்றவை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதித் தேர்தலில் இ. தொ. கா. நடுநிலைமை வகிக்கும்

விரும்பியபடி எவருக்கும் வாக்களிக்கலாம்

கொழும்பு, ஒக். 23

ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிப்பதென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

கட்சியின் ஆதரவாளர்களும் அங்கத்தவர்களும் தமது விருப்பப்படி தேர்தலில் வாக்களிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் நடந்த சகல தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இ. தொ. கா. தனது உறுதியான ஆதரவை வழங்கிவந்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் பகிரங்கமாக ஆதரவு வழங்குவதில்லை என்றும்—

நாட்டில் தற்போது காணப்படும் பிரிச்சினைகள், அரசியல் நிலைமை ஆகியவற்றை பரிசீலனை செய்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் இ. தொ. காவின் அரசியல் பிரிவின் உப தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான திரு.பி.பி. தேவராஜ் நேற்று மாலை அறிவித்தார்.

பிரசாரம் செய்யத் தடை

இந்த முடிவுக்கு அமைய இ. தொ. காவின் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைப்புகளில் உள்ள பிரதிநிதிகள், ஊழியர்கள் ஆகியோர் எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஆதரவாக தேர்தலில் பிரசாரம் செய்வது, ஆதரவு திரட்டுவது, கூட்டங்களில் உரையாற்றுவது என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு எந்த ஒரு வேட்பாளருக்காவது ஒருவர் பகிரங்கமாக பணியாற்றுவதாயின் அவர் தாம் வகிக்கும் பதவியில் இருந்து விலகிய பின்னர் அவ்வாறு செய்யலாம் என்றும் தேவராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஐக்கியதேசியக் கட்சி

(5 ஆம் பக்கம் பார்க்க)

சமாதானத்துக்காக முழந்தாளிட நான் தயாரில்லை

காமினி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 23

போர் என்றால் போர் — சமாதானம் என்றால் சமாதானம். இரண்டுக்கும் நான் தயாராகவிருக்கிறேன். ஆனால் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக முழந்தாளிடுவதை நான் எதிர்க்கின்றேன்.

ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸநாயக்கா வெள்ளவாயாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு என்றாலும் சரி, தெற்கு என்றாலும் சரி சமாதானம் வேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன்.

ஆனால் அதற்காக முழந்தாளிடுவதற்கு நான் தயார் இல்லை.

ஆயுதப்படையினர் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்று பொ. ஐ. மு. அரசு கோருகிறது.

ஆயுதப்படையினரும், ஆயுதங்களும் ஒன்று என்பது இவர்களுக்கு தெரியவில்லை. உண்மையை அறிந்துகொள்ள இன்றைய அரசு மறுத்துவருகிறது.

இவ்வாறு காமினி தெரிவித்தார். (இ-எ)

ராணுவத்துக்கு எதிரான நிலைப்பாடு அரசுக்கு பாதகநிலையை ஏற்படுத்தும்

எல்மோ பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 23

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க அண்மையில் படையினருக்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்களைத் தொடர்ந்து எழுந்துள்ள நிலை நீடிப்பின் அது அரசுக்குப் பாதகமாகவே அமையும்.

இவ்வாறு பி.பி.லியின் சிங்களச்சேவை செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கருத்து வெளியிட்டுள்ளார்.

தற்போது இடம்பெறும் சமாதான முயற்சிகளால் குறுகிய காலத்துக்குள் பயன் கிடைக்காவிடின் —

மீண்டும் இராணுவத்தைப் பயன்படுத்தி யுத்தத்தைத் தொடரவேண்டி ஏற்பட்டால் — அரசு பாதகமான நிலைக்குள்ளாக வேண்டியிருக்கும்.

அத்தகைய ஒரு நிலையில் இராணுவத்தின் ஒத்துழைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

இடம் பெயர்ந்த அரச, வங்கி ஊழியரை யாழ் திரும்புமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக். 23

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி பின்னர் இடம் பெயர்ந்து வேறிடங்களில் பணிபுரியும் அரச ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை உடனடியாகத் தாம் முன்னர் கடமை புரிந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும்படி அரசாங்கம் கேட்டுள்ளது.

அப்படி திரும்பிச் செல்ல முடியாதவர்கள் மாகாண சபை அமைச்சுடன் தொடர்பு கொண்டு, பழைய இடங்களுக்குச் செல்லமுடியாத காரணங்களைத் தெரிவிக்கும்படி அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அரசு அறிவித்தல் விளம்பரமாகவும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. [illegible]

முச்சந்தி முரளி

போட்டியிலிருந்து விலக மற்றொரு நிபந்தனை

முற்போக்கு முன்னணி விடுத்தது

கொழும்பு, ஒக். 23

இலங்கை முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலபதி தாம் போட்டியில் இருந்து விலக மற்றும் ஒரு நிபந்தனை விதித்துள்ளார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து விட்டால் போதாது. அதற்குப் பதிலாக மற்றொரு தனிநபர் ஆட்சிமுறை உருவாக்கப்படமாட்டாது என்று பிரதமர் சந்திரிகா

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பரிசுத்தினம் - 1994

25 — 10 — 1994 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10-00 மணி

முதன்மை விருந்தினர்
பேராசிரியர் வ. ஆறுமுகம்
தலைவர், கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பரிசில் வழங்கல்
திருமதி செல்வராணி ஆறுமுகம்

பெற்றோர், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

[சி-9430]

பாவியுங்கள்

அண்ணா பற்பொடி

25 வெற்று பற்பொடி பக்கட்டுகளைக் கொடுத்து ஒரு அப்பியாசக் கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

[சி-9522]

வைத்திய சேவை

வாதரோகமா? சருமரோகமா? உடல் பருமனா? உடல் மெலிவா? மலேரியாவா? நீரிழிவா? பீனிசமா? மூல வியாதியா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? மாதவிடாய்க் கோளாறுகளா? குழந்தைகளின் பீடைகளா? கவலை வேண்டாம்! அனைத்து ரோகங்களுக்கும் அரிய ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கப்படும்.

தினமும் காலை 8-30 முதல் 12-30

தலைமை: டாக்டர் த. சிவானந்தன்

'சிவா வைத்தியசாலை'
384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு.

கிளை:
'ஆனந்த மருத்துவ நிலையம்'
ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

தினமும் பி. ப. 3-00 — 6-00 வரை
(33464)

2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சங்கரப்பிள்ளை தம்பிஐயா
(ஓய்வுபெற்ற மலேசிய கல்வித்திணைக்கள நிதிப்பொறுப்பாளர்)

மண்ணில்: 16—03—1906
விண்ணில். 14—11—1992

திதி: 23 - 10 - 1994 (ஞாயிறு)

எங்கள் இதய வான மதில்
உங்கள் நினைவலைகள் ஓயவில்லை
காலம் ஈராண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்கவில்லை பப்பா!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

''செல்வானந்த வாசா'',
இணுவில் மேற்கு,
இணுவில்.

(33441)

"காதல்" தமிழீழ சட்டப்பிரிவின் கண்ணோட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத் துறை நடுவப் பணியகம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையை இங்கே தருகின்றோம்.

இன்றைய நவநாகரிக உலகில் ஒரு ஆணும், பெண்ணும் இன, மொழி, சாதி சமய வேறுபாடு இன்றியும் வயது வேறுபாடு இன்றியும் ஒரு பெண் அல்லது ஆண் தமக்கு ஏற்ற ஒரு பெண்ணையோ, ஆணையோ காதலிப்பது சாதாரண நிகழ்வாகும். இந் நிகழ்வானது தமிழீழத்தில் மட்டுமன்றி வளர்ச்சி அடைந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் நாம் சாதாரணமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பொதுவாக எந்த ஒரு நாட்டிலும் காதலிப்பது குற்றமில்லை. அக் காதலின் முறிவுக்கு உரியமான நஷ்டத்தையே பெறலாம். ஆனால் தமிழீழ சட்டத்தைப் பொறுத்தவரை ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ காதலிப்பதாகவாக்குறுதி கொடுத்து தகுந்த காரணம் காட்டாமல் அவ் வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் அச் செயலானது ஒரு குற்றமாகும்.

இப் பிரிவானது போர்க்கால சூழ்நிலையிலும், சமூக நிலமைகளில் இருந்தும் புத்துயிர் பெற்றது எந்த ஒரு குற்றவியல் வழக்கும் நியாயமான சந்தேகத்திற்கப்பால் (Beyond Reasonable Doubt) எதிரியே அக் குற்றத்தைச் செய்தாரென நிரூபிக்கவேண்டும். இந்த வகையில் வாக்குறுதி முறிவுகளின் அடிப்படையில் எழுகின்ற காதல் பிணக்குகளை குற்றப் பிரிவுகளில் அடக்கி எதிரியே அவ் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினார் என நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிரூபிப்பது எல்லோராலும் முடியாத ஒன்றாகும்.

உலக நீதிக் கோட்பாடுகளின்படி குற்றவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்கப்பட வேண்டும் என்று கூறுவது யாதெனில் ஆயிரம் குற்றவாளிகள் தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்ற பொதுக் கருத்தின் அடிப்படையிலே ஆகும். தமிழீழ நீதிமன்றுகளின் கணிப்பீட்டின்படி ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கவும் கூடாது. ஒரு நிரபராதி தண்டிக்கப்படவும் கூடாது.

சமூக யதார்த்தத்தின் அடிப்படையில் காதலித்துக் கைவிடல் எனும் குற்றப் பிரிவு தமிழீழ சட்டத்தில் ஏற்பாடாகவுள்ள போதிலும் அவ் வுரிமையை மக்கள் உரியமுறையில் கையாளமுனைவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் சட்டமானது உரிமைகளை வழங்குகின்றது. அவ் வுரிமைகளில் ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும்.

காதலானது பல வடிவங்களில் இன்றைய சமூகத்தில் காணக் கூடியதாகவுள்ளது. சில காதல்கள் பெற்றோராலோ அல்லது அதற்கு உரியவர்களாலோ அங்கீகாரம் பெற்றுத் தொடர்கின்றது.

ஆனால் சில காதல்கள் இதற்கு முற்றிலும் முரண்பாடாக யாருக்கும் தெரியாமல் அவ்விருவரும் மட்டுமே அறியக்கூடியதாக உள்ளது. இப்படிப்பட்ட பிரச்சினைகளே மிகவும் சிக்கலானதாகும். காதல் தொடர்பில் தமிழீழ சட்டப்பிரிவு திருமண ஏமாற்றம் (அ) எனும் பகுதி தனது உள்ளடக்கத்தை வெளிக்காட்டுகையில் பின்வருமாறு கூறுகின்றது

காதலித்த பின்னர் கைவிடுவது என்றால் சமுதாயத்திற்கு குறிப்பிட்ட காதலைப் புரிந்த ஆணும், பெண்ணும் திருமணம் முடிந்து வாழப் போகிறார்கள் என்று நம்பக் கூடியவாறு காதல் புரிந்தவர்களில் ஒருவர் திருமண வாக்குறுதியை மீறினால் அது காதலித்த பின்னர் கைவிடுதல் என்ற குற்றமாகும். இப் பிரிவானது இப்படி விளக்கியுள்ள போதிலும் எல்லாக் காதலும் சமுதாயம் நம்பும் அளவிற்கு நடந்துள்ளது என நிரூபிக்க முடியாது. இது இன்றைய யதார்த்தமும் கூட.

தமிழீழ நீதிமன்றுகள் 1993-08-21இல் ஆரம்பிக்கப்பட்டு 1994-08-21ஆம் திகதி வரை அவதானித்த வழக்குகளில் காதலித்துக் கைவிடுதல் குற்றமே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இதன் போது பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களே ஆவர்.

சில பெண்கள் தமது காதலின் அடிப்படையில் காதலன் தன்னை ஏமாற்றுவான் எனத் தெரிந்து கொண்டதும் தனது காதலை நிரூபிப்பதற்காக சகல சான்றுகளையும் தன்னகத்தே கொண்டு வந்து மன்றைத் திருப்திப்படுத்தும் அளவிற்கு தனது சாதுரியமான புத்தி வன்மையால் தன் பக்க வாதத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தி சமுதாயத்திற்கு வழி காட்டிச் செல்கின்றனர்.

ஆனால் மறுபுறம் ஒரு ஆடவனால் காதலிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டு நீதிமன்றில் வந்து நிற்கும் ஒரு பெண் தனது காதலை நிரூபிக்கும் எந்தவொரு சான்றையோ அல்லது ஊகித்து அறியக் கூடிய அளவிலான கூற்றையோ கூறமுடியாது தவிப்பதை நேரடியாகக் காணக் கூடியதாக உள்ளது.

தமிழீழத்தில் பொதுவாக பெண்கள் ஆயினும் சரி, ஆண்களாயினும் சரி தங்களுக்கு சட்டம் வழங்கிய உரிமையை மிகவும் அக்கறையுடன் கையாள தமிழீழ சட்டங்களை அறிந்து கொண்டு செயற்படுவோம். ★

ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கவும் கூடாது ஒரு நிரபராதி தண்டிக்கப்படவும் கூடாது

இலக்கிய விழாவுக்கு வவுனியா வருகிறார் பிரதமர்

பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா வருகின்றார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறும் இலக்கிய விழாவில் பிரதம அதிதியாக அவர் கலந்து கொள்வார்.

''இலக்கிய வழி இன ஒற்றுமை'' எனும் தொனிப்பொருளிலான இவ் விழாவில் கலாசார சமய அலுவல்கள் அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, பிரதி அமைச்சர் பேராசிரியர் சுரவீர ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

டொமினிக் 'ஜீவா, என். சோமகாந்தன், குணசேனவித்தான, கே. ஜயதிலக, பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, பிரேம்ஜி ஞானசுந்தரம் முதலிய எழுத்தாளர்களும் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள். (க)

துர்க்காபுர மகளிர்இல்ல பரிசளிப்பு

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 12 ஆண்டுகள் நிறைவையொட்டிய பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணி முதல் மருதானர்மடம் இராமநாதன் கல்லூரியில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

விழாவில் மருதனார் மடம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. இரத்தினராசா முதன்மை விருந்தினராகவும், வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேசச் செயலர் திரு நா. வேதநாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க)

நீடிப்பு

அகில உலக ஆசிரியர் நாளை ஒட்டி விளக்கு சஞ்சிகையால் நடத்தப்படும் சிறுகதை, சிறுவர் நாடக எழுத்துரு ஆக்கம் என்பவற்றிற்கான போட்டி முடிவு திகதி, பலரின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஒ)

நான் வென்றால் எமது அணியை உலகின் சிறந்த கிரிக்கெட் அணியாக மாற்றுவேன்

பிரசாரக் கூட்டத்தில் காமினி

கொழும்பு, ஒக். 23

நான் ஜனாதிபதியினால் இலங்கை கிரிக்கெட் அணியை உலகின் சிறந்த அணியாக மாற்றுவேன்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

ஹெட்டி பொலவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய போது அவர் இந்த உறுதி மொழியை அளித்தார்.

தாம் ஜனாதிபதியானால் நாட்டில் அரசியல் வன்செயல்களை ஒழிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்,

நாட்டுக்குப் புதிய எதிர்பார்ப்புகளுடன் கூடிய புதிய நிர்வாகம் ஒன்றை வழங்கத் தாம் திட்டமிட்டிருப்பதாவும் அவர் தெரிவித்தார்.

"பிஞ்சுமனம்" திரைப்படம்

வெகுவிரைவில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய ''பிஞ்சுமனம்'' என்னும் முழு நீளப்படம் வெளிவரவிருக்கின்றது.

1986—87 காலப்பகுதிகளில் உருவான ''மரணம் வாழ்வின் முடிவல்ல'' ''தாயகமே தாகம்'', ஆகிய முழு நீளப் படங்களின் இயக்குநர் திரு. கேசவராஜனின் கதை, திரைக்கதை, வசனம், நெறியாள்கையில் இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின்திரைப் படப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் யாழ். மாவட்ட கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இப்படத்தின் இசையமைப்பினை ராஜன்ஸ் இசைக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (ஒ)

புலிகளின் குரல் வானொலியில்

23 — 10 — 1994
ஞாயிறு இரவு

★ 8-01 — இசையரங்கம் - மிருதங்கபூபதி ஏ. சந்தானகிருஷ்ணன் அவர்களின் 'லயவிந்நியாசம்'
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் – பொன். கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண் 44ஆம் அங்கம்''

24 — 10 — 1994
திங்கள் காலை

★ 7-03 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

ஆண்டு இறுதிக்கு முன் ஐ. ஆர். ஏ.யுடன் பேச்சு

பிரிட்டிஷ் பிரதமர் அறிவிப்பு

பிரிட்டிஷ் அரசு அங்கு ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த ஐரிஷ் விடுதலை இராணுவம் என்ற ஐ.ஆர்.ஏ இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த சம்மதம் தெரிவித்துள்ளது.

ஐ. ஆர். ஏ. இயக்கத்தின் யுத்த நிறுத்தம் கடந்த 7 வாரங்களாக தொடர்வதால் இப்பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக பிரிட்டிஷ் அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக பிரிட்டிஷ் பிரதமர் ஜோண் மேஜர் நேற்று வடஅயர்லாந்து போய்ச் சேர்ந்தார். இவ் ஆண்டு இறுதிக்குள் ஐ. ஆர். ஏ இயக்கத்தின் அரசியல் பிரிவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-4)

பாரதக்கதை வெளியீட்டு விழா

எழுத்தாளர் திரு. வரதர் எழுதிய ''பாரதக் கதை'' நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மக்கள் வங்கி அதிகாரி திரு. ச. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் ஆய்வுரைகளை கலாநிதி ப. கோபால கிருஷ்ணன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஜி. இராசநாயகம், கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர். (ஒ-4-51)

மாணவர் விவாத அரங்கு

ஐக்கிய நாடுகள் தினத்தை ஒட்டி நாளை திங்கட்கிழமை சாவகச்சேரிப் பாடசாலைகளின் ஆண்டு 12, 13 மாணவர்களிடையேவிவாத அரங்கு இடம்பெறும்.

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தினர் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் விவாத அரங்கை ஒழுங்கு செய்துள்ளனர். (க-117)

வெங்காயம் விளைச்சல்

யாழ்ப்பாணத்தில் இம்முறை பம்பாய் வெங்காயச் செய்கை நல்ல விளைச்சலைப் பெற்றுள்ளது.

அராலி, செம்பியன்பற்று' உரும்பராய், அளவெட்டி, நல்லூர் ஆகிய பகுதிகளில் பம்பாய் வெங்காயச் செய்கை இம்முறை மேற்கொள்ளப்பட்டது. (க-17)

தமிழீழ ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்

ஆசிரியர் தின விழாவில் உரை

தென்மராட்சி, ஒக். 23

''எமது தமிழீழ ஆசிரியர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். பல்வேறு வசதிகள் குறைந்த நிலையிலும் தமிழ் மாணவர்களை கல்வியில் கொழும்பு மாணவர்களின் தரத்துக்கு உயர்த்திய பெருமை அவர்களையே சாரும்''

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் உரை நிகழ்த்திய அரசியல்துறை நடுவப்பணியகப் பொறுப்பாளர் அரசண்ணா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

அண்மைக்காலக் கல்விக் கணிப்புகளின்படி தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் பல துறைகளிலும் ஏனைய கோட்டங்களை விடமுன்னணியில் செயல்படுவதை அவதானிக்க முடிகிறது. இதற்கெல்லாம் இங்கு பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்களின் ஒருங்கிணைந்த சேவை தான் காரணம் என்று கூறவேண்டும் என்றார்.

தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் திட்டமிடல் பணிப்பாளர் க. சுப்பிரமணியம் உட்பட பலர் உரை நிகழ்த்தினார்.

ஆசிரியர்களின் விவாத அரங்கும், இசை நிகழ்ச்சிகளும் நாடகமும் இடம்பெற்றன. (க-117)

தென்னை, பனம்தொழில் நுட்பம் குறித்து விரிவான நூல்கள் இல்லை

விவசாயிகள் தினவிழாவில் கவலை

யாழ்ப்பாணம், ஒக் 23

தொழில் சார் அறிவியல் ரீதியான நுட்பங்களினால் தான் எமது சமுதாயம் வளரும். தென்னை பனம் தொழில் நுட்பம் பற்றிய விரிவான நூல்கள் இதுவரை வெளிவரவில்லை. சமாசம் இந்தக் கடமைகளை எண்ண வேண்டும்

பனை தென்னை வள கூட்டுறவு சமாசம் பனை அபிவிருத்திச் சபைகளின் சார்பில் நடைபெற்ற அனைத்துலக விவசாயிகள் தின விழாவில் பேசிய யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. வே. இளம்பரிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

விழா யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் திரு. சிவகப்பிரமணியம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தேசியக் கொடியை திரு. வே. இளம்பரிதியும் கூட்டுறவுக் கொடியை திரு. எஸ். சபாரத்தினமும் ஏற்றினார்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திச் சபைப் பொறுப்பாளர் திரு. அருள் மங்கள விளக்கேற்றினார்.

திரு. இளம்பரிதி மேலும் கூறியதாவது:

இங்கு வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் உலகின் உதவிகள் எதுவும் இல்லாத நிலையில் எமது மக்களின் வாழ்க்கை வளத்தைக் கண்டு வியந்தார்கள்.

புதிய உலகைக் காண விரும்பும் நாம் புதிய சிந்தனையும், ஆற்றலும் கொண்டவர்களாக வாழவேண்டும். சிலர் தமது வாழ்விற்காக இந்தச் சமுதாயத்தைப் பின் தள்ளினார்கள். இன்று இந்த நிலை இல்லை.

[illegible] உழைத்து வாழ்வோம் தொழில் அபிவிருத்தியின் மதிப்பீடாக விவசாய விழா அமைகின்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

வட பிராந்திய கூ. அ. உ. ஆணையாளர் திரு. எஸ். சபாரத்தினம் பேசும் போது கூறியதாவது:

இன்று இருபத்தி ஐந்து முதல் முப்பது வீத வளர்ச்சியே நாம் பனம்தொழிலில் கண்டுள்ளோம் சீனி, வெல்லம் போன்ற உற்பத்திகளுக்காக ஆக்கூடிய நடவடிக்கைகளைச் சங்கங்கள் மேற்கொள்ளக் கூடியதாக தங்கள் பிரதேசத்தில் பனம் தொழில்களை வளப்படுத்தும் ஆர்வமும் அடிப்படை அங்கத்தவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் இடம் பெற வேண்டும் — என்றார்

மற்றும் பலரும் [அங்கு உரையாற்றினர்.

சிறந்த கிளைகள் தொழிலாளர்கள், பணியாளர்களுக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் திரு. இளம்பரிதி வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

குறைக்கப்பட்ட கட்டண சேவை

E. C. G. என்னும் இருதய பரிசோதனை நோயாளரின் நலன் கருதி குறைக்கப்பட்ட கட்டண சேவையாக (ரூபா 100/-) காலை, மாலை நடைபெறுகின்றது.

நிர்வாகி
எஸ். பாலன்

சம்பந்தர் மொடேர்ன்
வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்,
யாழ். வைத்தியசாலை முன்பாக,
சாந்தி தியேட்டர் ஒழுங்கை,
முதலாம் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

(33481)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிழக்கு ஆசியாவில் நெருக்கடி நிலை தளர்வதற்கு உதவும்

அமெரிக்கா - வடகொரியா அணுசக்தி ஆலை ஒப்பந்தம்

ஹெய்ட்டியில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் அமெரிக்கா அடைந்துள்ள வெற்றி, நேற்று முன்தினம் வடகொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஜெனீவாவில் கைச்சாத்தான ஒப்பந்தம், சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை கைச்சாத்தான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் (Defence Cooperation Pact) ஆகியவை சர்வதேச அரங்கில் இவ்வாரம் இடம் பெற்றுள்ள நம்பிக்கையூட்டும் நிகழ்வுகள் ஆகும்.

இதனைவிட எதிர்வரும் புதன்கிழமை ஜோர்தானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் மத்தியகிழக்குப் பிரச்சினை தீர்வு முயற்சிகளில் மற்றொரு மைல்கல் என்பதில் சந்தேகம் இல்லை.

வடகொரிய — அமெரிக்க ஒப்பந்தம்

நேற்று முன்தினம் வடகொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஜெனீவாவில் கைச்சாத்தான ஒப்பந்தம் கடந்த ஒருவருடத்துக்குமேலாக கொரிய தீபகற்பத்தில் நிலவிவந்த நெருக்கடியைத் தளர்த்த உதவும் என்று நம்பப்படுகிறது.

வடகொரிய அணுசக்தி ஆலைகள் தொடர்பான இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா சார்பாக ஜனாதிபதி பில்கிளின்ரனின் விசேட தூதுவர் றொபேர்ட் கலுசியும் (Robert Gallucci), வடகொரியா சார்பாக வடகொரியாவின் முதலாவது பிரதி வெளிவிவகார அமைச்சர் காங்சொக்—ஜூ வும் (Kang Sok — Ju) கைச்சாத்திட்டனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் இது தொடர்பான நகல் திட்டம் ஒன்றை இந்த இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டிருந்தன.

பின்னர் செப்ரெம்பர் 23 ஆம் திகதி ஜெனீவாவில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. இதன் பயனாக கடந்த வெள்ளியன்று ஒப்பந்தம் கைச்சாத்தானது.

நெருக்கடி உருவானது எப்படி?

வடகொரியாவிடம் அணுக்குண்டு இருக்கலாம் என்று அமெரிக்கா நீண்டகாலமாகச் சந்தேகித்து வந்தது.

1970 இல் செய்து கொள்ளப்பட்ட அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தின்படி (Nuclear Non Proliferation Treaty) சர்வதேச அணுசக்தி ஏஜென்சி உறுப்பினர்கள் வடகொரியாவின் அணுசக்தி ஆலைகளைப் பார்வையிட வடகொரியா அனுமதி மறுத்தபோது அமெரிக்காவின் சந்தேகம் வலுத்தது.

International Atomic Energy Agency) என அழைக்கப்படும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சி, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகள் ஒப்பந்தத்தின்படி செயற்படுகின்றனவா என்பதை அவதானிக்க ஐ. நாவினால் ஏற்படுத்தப்பட்ட ஓர் உப பிரிவு ஆகும்.

இந்த சர்வதேச அணுசக்தி ஏஜென்சி உறுப்பினர்களுக்கு போதிய ஒத்துழைப்பு வழங்க வடகொரியா மறுத்ததை அடுத்து வடகொரியாவுக்கு எதிராக ஐ. நா. மூலம் தடைகள் (Sanctions) கொண்டுவர அமெரிக்கா முயன்றது— அதற்கான ஆயத்தங்களையும் செய்தது.

அமெரிக்காவின் தடை நடவடிக்கையை வடகொரியா எதிர்த்தது.

அதனை தனக்கு எதிரான யுத்த பிரகடனமாகக் கருதப்போவதாக காலஞ்சென்ற வடகொரிய ஜனாதிபதி கிம்—உல்—சுங் (Kim - il-Sung) அறிவித்தபோது

வெளி உலகில்

கொரியாவில் யுத்த நெருக்கடி உருவானது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரின் சமாதானத் தூதின் பயனாக அமெரிக்காவுடன் வடகொரியா பேச்சுக்களை நடத்தி தற்போது ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

கடந்த ஜூலையில் கிம்—உல்—சுங் மாரடைப்பினால் திடீரென மரணமானதால் வடகொரிய — அமெரிக்க சமாதான முயற்சிகள் தாமதம் அடைந்தன. கிம்—உல்—சுங்கின் மரணத்துக்குப் பின்னர் வடகொரியாவின் ஜனாதிபதியான அவரது மூத்த புதல்வர் கிம் யொங்—இல் (Kim Yong — il) தந்தை ஆரம்பித்து வைத்த சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு ஒப்பந்தம் ஒன்றுக்கு அதனை இட்டுச் சென்றுள்ளார்.

இரு வழிகள்

அணுசக்தி ஆலைகள் தொடர்பாக நெருக்கடி ஆரம்பமானபோது அதனைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவிடம் இரு வழிகளே இருந்தன.

ஒன்று ராஜதந்திர ரீதியாக வடகொரியா மீது நெருக்குதலைத் தொடர்வது.

மற்றது கிம் — உல் — சுங் (வயது 84) மரணம் வரை வடகொரியாவை தொடர்ந்து யுத்த நெருக்கடிக்குள் வைத்திருப்பது.

இரண்டாவது மார்க்கம் கொரியாவை மற்றொரு யுத்தம் ஒன்றுக்குள் தள்ளி விடக் கூடியது. அபாயகரமானது.

மற்றொரு யுத்தம் மூளுமானால் அது பேரழிவையே கொடுக்கும்.

1950—53 கொரிய யுத்தத்தின் போது தென் கொரியா முற்றாக அழிந்து சுடுகாடு போல் காட்சி அளித்தது. கடந்த 40 வருடகாலத்துக்கு தென் கொரியா அதிசயிக்கத்தக்க விதத்தில் தற்போது முன்னேறிவிட்டது.

மற்றொரு யுத்தம் சாத்தியமா?

கொரிய தீபகற்பத்தில் மீண்டும் ஒரு யுத்தம் நினைத்துப் பார்க்க முடியாதது என்று அமெரிக்க யுத்த ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

★ கொரியாவின் பூகோள அமைப்பு வடகொரியாவுக்கே சாதகமாக இருக்கிறது. தென் கொரியத் தலைநகர் சோல் (Seoal) வடகொரிய எல்லைக்கு வடக்கே மிகவும் குறுகிய தூரத்தில் இருப்பதால் வடகொரியாவின் எந்த ஒரு திடீர் தாக்குதலும் தலைநகர் சோலை வீழ்த்தி விடும்.

★ வடகொரியா தனது ஏவுகணைத் தளங்களைத் தென் கொரிய எல்லைக்குச் சமீபமாக உள்ள மலைப்பிரதேசங்களில் மறைத்து வைத்துள்ளது. அமெரிக்காவின் உளவறியும் சாதனங்களால் கூட கண்டுபிடிக்க முடியாதபடி 'நில' அறைகளில் உள்ளன இந்த ஏவுகணைத் தளங்கள். இவை தானியங்கி முறை மூலம் மேலே வந்து கண் இமைக்கும் நேரத்துக்குள் தாக்குதல் நடத்திவிட்டு மீண்டும் கீழே சென்றுவிடக் கூடியவை.

இந்த ஏவுகணைத் தளங்களை அழிப்பதற்கு அமெரிக்கா புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது. இது 1996 இலேயே சாத்தியமாகும் என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு நம்புகிறது.

★ வடகொரியாவிடம் உள்ள ஸ்கட்—பி, ஸ்கட்—சி (Scud-B, Scud-C) ஏவுகணைகள் அதிசக்தி வாய்ந்தவை. 1991 வளைகுடா யுத்தத்தில் ஈராக் பயன்படுத்திய ஸ்கட்ஸ் ஏவுகணைகளை விட இவை எவ்வளவோ மேலானவை.

வடகொரியாவின் ஸ்கட் ஏவுகணையுடன் ஒப்பிடும் போது அமெரிக்காவின் பேட்றியட் (P A C-2 Pa riot) ஏவுகணைகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஒத்தவையே.

வடகொரிய — சீன நட்பு

1950—53 கொரிய யுத்தத்தின் போது வடகொரியாவுக்கு ஆதரவாக சீனா தென் கொரியாவுக்குள் படைகளை அனுப்பி இருந்தது. சோவியத் யூனியனும் வடகொரியாவையே ஆதரித்தது.

அன்று முதல் இன்று வரை வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடாக சீனா இருந்து வருகிறது.

அணுசக்தி ஆலை நெருக்கடியின் போது வடகொரியா மீது அமெரிக்கா தடைகளைக் கொண்டுவர முயன்றது. அப்போது சீனாவின் 'வீட்டோ' பயமுறுத்தல் அமெரிக்காவுக்குப் பெரிய சவாலாக இருந்தது.

ஆனால் தற்போது வடகொரியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள அமெரிக்கா சீனாவுடனும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பது கிழக்கு ஆசியாவில் நெருக்கடி தளர வழிபிறக்கும்.

1989 தியென் அன் மென் படுகொலைகளின் பின்னர் அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் (பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரி) சீனா சென்றிருப்பதும்—

வெள்ளியன்று ஜெனீவாவில் கைச்சாத்தான அணுசக்தி ஆலைகள் தொடர்பான வடகொரிய—அமெரிக்க ஒப்பந்தமும் கிழக்கு ஆசியாவில் கடந்த 45 வருட காலத்தில் நிகழ்ந்திராத அரசியல் திருப்பங்கள் ஆகும்.

★

ஜெனீவா ஒப்பந்தம்

ஜெனீவாவில் கடந்த வெள்ளிக்கிழமை வடகொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின் படி —

★ வடகொரியா தனது அணுசக்தித்திட்டங்களை முடக்கி வைக்கவும் —

சகல திட்டங்களையும் சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸியின் கண்காணிப்புக்கு விடவும் — இணங்கி உள்ளது.

★ அமெரிக்காவும், வடகொரியாவும் வர்த்தகத் தடையைத் தளர்த்தவும் இரு நாடுகளிலும் தொடர்புக் காரியாலயங்களை அமைக்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ 2000 மெகாவாட் அல்லது தலா 1000 மெகாவாட் சக்தியுள்ள இரு அணுசக்தி நிலையங்களை அமைப்பதற்கு 400 கோடி டொலரை வடகொரியாவுக்கு வழங்குவதற்கு சர்வதேச நிதி உதவி மாநாடு ஒன்றை அமெரிக்கா கூட்டும். இதில் ஜேர்மனி, ஜப்பான், ரஷ்யா, தென்கொரியா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும். வடகொரியா இனி அணு ஆயுதத்துக்குத் தேவையான புளூட்டோனியத்தை உற்பத்தி செய்யமாட்டாது.

இந்த ஒப்பந்தம் வடகொரியாவின் அணுசக்தி திட்டத்தை ரத்துச் செய்வதற்கு அடிப்படையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

வடகொரியாவின் 44 வருடகால ஒதுங்கி வாழும் நிலை அகல இந்த ஒப்பந்தம் வழி வகுக்கும் என்றும்— உலக சமுதாயத்தில் வடகொரியா ஒன்று சேர இந்த ஒப்பந்தம் உதவும் என்றும் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

44 வருட ஒதுங்கி வாழும் நிலையை கிம் யொங் - இல் கைவிடுவாரா?

அமெரிக்கா சீனாவுடனும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பது கிழக்கு ஆசியாவில் நெருக்கடி தளர வழிபிறக்கும்.

1989 தியென் அன் மென் படுகொலைகளின் பின்னர் அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் (பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரி) சீனா சென்றிருப்பதும்—

வெள்ளியன்று ஜெனீவாவில் கைச்சாத்தான அணுசக்தி ஆலைகள் தொடர்பான வடகொரிய—அமெரிக்க ஒப்பந்தமும் கிழக்கு ஆசியாவில் கடந்த 45 வருட காலத்தில் நிகழ்ந்திராத அரசியல் திருப்பங்கள் ஆகும்.

★

சஞ்சாரன்

சூரியகாந்தி
உதயன் சூரிய சிறப்பகம்

தனியார் கல்வி நிறுவனங்கள் சூழ்நிலைக்கேற்ப பாடசாலைகளுடன் இணைந்து செயற்படலாம்

யாழ். இந்து அதிபர் தெரிவிக்கும் யோசனை

இன்று அதிபர்களின் நிலை பரிதாபத்துக்குரியது. மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படாத வகையில் பாடசாலையைச் செயற்படுத்துவதற்காக அதிபர்களில் பலர் எதிர்நீச்சல் போடவேண்டியுள்ளது. இந்நீச்சல் எவ்வளவு காலத்துக்குச் சாத்தியமாகும் என்பதே அடுத்த வினா. இங்கு நான் குறிப்பிடுவது ஆசிரியரின்றிக் காணப்படும் வகுப்பறைகள், அதனால் மாணவருக்கு ஏற்படும் பாதிப்பு. இந்நிலை அதிபரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. சாதாரணமாக ஆசிரியர் தமது சொந்த லீவினைப் பயன்படுத்துவதை நான் இங்கு குறிப்பிடவில்லை.

அரசாங்கப் பாடசாலைகள் வருடத்தில் 190 நாட்களுக்குக் குறையாமல் நடைபெறும். ஆனால் ஆசிரியர் எடுக்கும் சொந்த லீவு, வேறு லீவுகள், பாடசாலை நேரத்தில் நடத்தப்படும் இணைப்பாடச் செயற்பாடுகள், தவணைப் பரீட்சைகளும் விடைத்தாள் மதிப்பிடுதலும், சீரற்ற காலநிலை போன்றவற்றினால் 60–70 நாட்கள் வரை கற்பித்தல் நடத்த முடியாதுள்ளது.

எனவே ஏறத்தாழ 170 நாட்களில் கற்பித்து முடிக்க வேண்டிய பாடவிதானத்தை 125 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால்விரைவாகக்கற்பிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்கள் பாடசாலையில் சேவையாற்றும் அதே வேளையில் அவர்கள் தங்கள் தொழில்சார் வளர்ச்சியினையும் பெற அதிபர்கள் உதவவேண்டும். இதற்கு எந்த அதிபரும் தடையாக இருக்கக் கூடாது. வெளிவாரிப்பட்டப் படிப்பு, வார இறுதி ஆசிரியப் பயிற்சி நெறிகள் போன்ற பல சந்தர்ப்பங்கள் ஆசிரியர்களின் தொழில் சார் விருத்திக்கு உண்டு.

இதில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் தங்கள் வேலை முடிந்தால் போதும் பாடசாலைகள் எக்கேடு கெட்டாலும் எமக்கென்ன என்ற நிலையில் செயற்படுகின்றன. பாடசாலை விடுமுறைகள்மொத்தமாக மூன்று மாதங்களுக்கு உண்டு. இந்த விடுமுறை காலத்தில் அவர்கள் தங்கள் பரீட்சைகளை நடத்தலாம். அப்படி நடத்துவார்களானால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஒருமாதம் பாடசாலைக்கு வருகை தராது நிற்க வேண்டி ஏற்படாது.

மேலும் ஆசிரியர்கள் பாடசாலைக் கற்பித்தலில்இருந்து வேறு பதவிகளுக்கு விடுவிக்கப்பட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களும் பல. இவ்வாறாக விடுவிக்கப்பட்டுச் செல்லும் ஆசிரியரின் வெற்றிடம் பல மாதங்களாக நிரப்பப்படுவதில்லை.

இக்காரணிகளால் 125 நாட்கள் கற்பித்தல் மேலும் சில பாடங்களுக்குக் குறைகின்றது.

இழக்கும் நாட்களுக்குப்பதிலாக மேலதிக வகுப்புக்களை பாடசாலை நடைபெறாத நாட்களில் ஒழுங்கு செய்தால் அதற்கு மாணவர்கள் வரவு குறைவாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்களும் இவ்வகையான வகுப்புக்களை நடத்துவதில் ஆர்வம் காட்டுகின்றார்கள் இல்லை.

போதிய வளம் உள்ள பாடசாலைகள் ஆளணிப் பற்றாக்குறையை ஓரளவு தீர்க்கக் கூடியனவாகஉள்ளன. குறுகிய காலத்திற்குள் தங்கள் பணத்தில் ஆளணியினரை அமர்த்தி நிலையை ஓரளவு சீராக்கலாம். நெடுநாட்களுக்கு இது சாத்தியமில்லை.

இந்தச் சூழலிலும் கூட மீதிறன் (அதிவிவேகம்) கூடிய மாணவர்கள்நல்ல பெறுபேறுகளைப் பெறத்தான் செய்வார்கள். அவர்களுக்கு கற்பித்தலில் மீள வலியுறுத்தல், பரிகாரக் கற்பித்தல் போன்றவை அவசியமில்லை. இருந்த போதிலும் போட்டிப் பரீட்சைக்குதோன்றும் மாணவர்கள் தங்கள் ஊரீதியான தேவையினையும், போட்டியில் பிறரை முந்த வேண்டிய தேவையினையும் பூர்த்தி செய்வதற்காக மேலதிகமாகக் கற்க வேண்டிய தேவை உண்டு. இதற்காக அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல வேண்டி ஏற்படுகின்றது.

பெரும்பாலான மாணவர்கள் அதிவிவேகிகள் (மீதிறன் கூடியவர்கள்) என்ற பிரிவில் அடங்கமாட்டார்கள். இவர்களுக்குப் பரிகாரக் கற்பித்தல், மீள வலியுறுத்தல் போன்ற கற்பித்தல் யுக்திகள் கையாளப்பட வேண்டும். கற்பித்தல் நேரம் போதாமையினால் இந்த யுக்திகளை பாடசாலையில் முற்று முழுதாகக் கையாள முடியாதுள்ளது. எனவே இம்மாணவர்கள் தங்கள் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்காக தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றனர்.

தனியார் கல்வி நிறுவனங்களும் இப்பொழுது செயற்படும் முறையில் இம்மாணவர்களுக்கு அதிக பலன் அளிக்க முடியாது. பயனுள்ள வகையில் இவை இயங்க வேண்டுமானால் அவற்றிலும் பல மாற்றங்கள் உருவாக்கப்படல் அவசியம்.

பேராசிரியர் தாஸ் அவர்கள் எனவே முதற்படியாக பின் வரும் மாற்றங்களையாவது நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றது:—

★ பாடசாலை ஆசிரியர்கள் தமது வகுப்பல் கற்கும் மாணவர்களை தனியார் கல்வி நிலைய வகுப்பில்அனுமதியாதிருத்தல். ஆசிரியர் தனது வகுப்பில் பூரண கவனம் எடுத்திருந்தால்— தனது பொறுப்பில் உள்ள மாணவர்கள் பால் தனது கடமை [illegible] தான இரண்டு ஓவியங்கள் பனை, வடலி, பற்றைகள், அவற்றின் ஊடாக [illegible] தூல் மாணவன் வேறு ஆசிரியர்களிடம் [illegible]

> இக்கட்டுரையாசிரியர் திரு. அ. பஞ்சலிங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தேசியக் கல்லூரியான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர். கல்வி நிர்வாகத்துறையில் பழுத்த — மூத்த — அதிகாரி. சர்ச்சைக்குரியதாகவிருக்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடு குறித்து அவர் தெரிவித்திருக்கும் கருத்துகள் சிந்தனைக்குரியவை. (ஆ-ர்)

-அ. பஞ்சலிங்கம்

(அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

ஈழமண்ணின் வாசனை கமழ்ந்த தமிழ் இன்பக் கண்காட்சி- 1994

யாழ். இந்துக் கல்லூரியில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்ற கண்காட்சிக்கு தமிழின்பக் கண்காட்சி என்று பெயர் வைத்தவர்களுக்கு வாயில் கற்கண்டு போட வேண்டும்.

ஈழத்தமிழ் இன்பக் கண்காட்சி என்றிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

தமிழ் ஈழத்தின் வாழ்வையும் வளத்தையும் இக் கண்காட்சி எடுத்து இயம்பியது. ஈழத் தமிழ் மக்களின் இன்பத்தையும் துன்பத்தையும் அவலங்களையும் போராட்டங்களையும் அதில் தத்ரூபமாகக் காணக்கூடியதாக இருந்தது.

போரினால் மனம் நொடிந்து உடல் நலிந்து இருக்கும் எம் மக்களுக்கு ஒரு களியாட்ட விழாவாக மட்டும் கண்காட்சி அமையவில்லை; அவர்களுடைய வரலாற்றை விளக்கும் அரிய அறிவுக்கூடமாகவும், கலைச் சிறப்புகளைக் காட்டும் களஞ்சியக் கூடமாகவும் அது அமைந்தது.

அற்புத ஓவியங்கள், நவீன புகைப்படங்கள், நுண்ணிய வேலைப்பாடுடைய மரச்சிற்பங்கள், வண்ண வண்ணக் காவடிகள் இவற்றை அங்கு காணக்கூடியதாக இருந்தது.

இது மட்டுமா?

நமது மக்களின் பாரம்பரிய உழைப்புக் கருவிகளையும் அங்கு காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

ஈழத் தமிழ் மக்களின் அறிவுத் தாகத்தைத் தீர்க்கும் ஈழத்து சஞ்சிகைகள், நூல்கள் கண்காட்சியில் முக்கிய இடத்தைப் பிடித்தன.

கருக்கமாகக் கூறின் கண்காட்சியில் ஈழத்து மண்ணின் வாசனை குழைந்து வீசியது.

ஓவியப் பகுதி

உதாரணத்துக்கு ஓவியப் பகுதியை எடுக்கலாம்.

எமது பனையும் வடலியும் பற்றைகளும் ஓவியங்களில் இடம் பெறமுடியாதா என்று கவலைப் பட்டவர்களுக்கு கண்காட்சி பதில் அளித்தது. [illegible] சாக்குகளில் சுமை சுமந்து வரும் பெண்கள்ஆகியவற்றை சித்திரித்திருந்தன.

பத்துக்கு மேலான மண்டபங்களில் நடைபெற்ற கண்காட்சியை சாதாரணமாகப் பார்ப்பதற்கு இரண்டு மணி நேரம் எடுக்கும். ஆனால் மக்கள்தமக்கு விரும்பியபகுதிகளில் கூடுதல் நேரம் செலவழித்துப் பார்வையிட்டார்கள்.

சிலர் ஓவியங்களில் திளைத்து நின்றார்கள்; வேறு சிலர் சிற்பங்களில் லயித்துநின்றார்கள்; இன்னும் சிலர் சஞ்சிகை நூல் பகுதிகளில் தரித்து நின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவும் புகைப்படப் பிரிவும் தமிழர் கதைகளைக் கூறி நின்றன. புகைப்படப் பிரிவு தமிழர் வரலாற்றையே எடுத்துக் கூறுவதாக அமைந்தது

வெளியீட்டுப் பிரிவில் அவர்கள் வெளியிட்ட நூல்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்பதை அது அறிவுறுத்தியது.

புகைப்படப் பிரிவு

புகைப்படப் பிரிவில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் "உலக உலா" சஞ்சிகையை உன்னிப்பாக வாசித்துக் கொண்டிருக்கும் கவர்ச்சிகரமான படம் ஒன்று இருந்தது.

எமது மக்களுக்கு உலகம் பற்றிப் போதிய அறிவு இருக்கவேண்டும் என்று அது கூறுவது போல் விளங்கியது.

கண்காட்சியில் நாட்டார் வாழ்வியல் – தமிழர் பாரம்பரியப் பாவனைப் பொருள்கள் என்ற பிரிவு புதுமையானதாகும். இதில் வியாபாரி மூலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சி.நா. சொக்கநாதபிள்ளை சேகரித்த மூன்று தலைமுறைகளுக்கு முந்திய பாவனைப் பொருள்கள் இருந்தன.

பல இளைஞர்களும் யுவதிகளும் இப் பிரிவில் கவனம் செலுத்தினார்கள்.

மாட்டுத் தொட்டில், பீலிப் பட்டை, செம்புகள், கலப்பை, நுகங்கள், மரச் சிகரம், மருந்தரைக்கும் அம்மிகள், மிதிதடிகள், கோர்க்காலிக் கால்கள், உரல்கள், பனை மர உலக்கைகள் — இத்தியாதி பொருள்களை இளைஞர் விந்தையாகப் பார்த்தார்கள்.

எமது பழமையைப் போதிக்கும் காட்சியகமாக இது அமைந்தது.

ஆவணக் காப்பகம்

குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தின் உலகத் தமிழ் ஆவணக் காப்பகக் காட்சி மூன்று மண்டபங்களில் இடம் பெற்றது. ஆவணப்படுத்தலின் முக்கியத்தை பார்வையாளர்கள் உணர அது உதவியது.

இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றத்தில் காட்சியகத்தில் இருந்த மருந்து மூலிகைச் செடிகள் மாணவர்களும், மற்றவர்களும் மூலிகைகளைப் பற்றிய அறிவைப் பெற பயனுள்ளவையாக அமைந்தன.

மங்களபதி மருத்துவ நிலையத்தின் காட்சியகத்தில் அங்கு உற்பத்தி செய்யப்படும் நூற்றுக்கு மேலான மூலிகை மருந்துவகைகள் வைக்கப்பட்டிருந்தன.

இவை தவிர, வசந்தம் புத்தக நிலையம், அண்ணா தொழிற் சாலை, மில்க்வைற் தொழிலகம், கோபாம், ரேல்ரி ஆகியன விற்பனையும் கண்காட்சியும் இணைந்த பணியில் ஈடுபட்டிருந்தன.

இன்னும் இலங்கைக் கைப்பணிச் சபை, மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ். மாநகராட்சி சுகாதாரப் பிரிவு, முளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம் ஆகியனவும் தமது காட்சி மூலம் கண்காட்சியின் பரந்த தன்மைக்குப் பங்களித்தன.

ஈழத் தமிழ்க்கலைச் சிறப்புகளைக் காட்டும் வாகனங்கள், கோயில் சிலைகள், சிற்பங்கள் ஆகியனவும் இசைக் கருவிகள்நடன நாடக அலங்காரப் பொருள்கள் ஆகியனவும் கண்காட்சியின் மற்றொரு சிறந்த அம்சமாகும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

-பாரதிநேசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

தினத்தந்தி, ஞாயிறுமலர், வெள்ளிமலர் இலவச இணைப்பு புத்தகத்துடன் விற்பனையாகின்றன. வெள்ளிமலர், குடும்பமலர் இரண்டும் ஒரே முறையில் எடுப்பவர்களுக்கு மட்டும் வியாழமாற்ற புத்தகம் இலவசமாக வழங்கப்படும். சலுகை 31-10-94 மட்டும். இடைக்குமிடம் கனகா றோடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. (சி-9427)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல்கள், பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. இல:07, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (33455)

பொமனேரியன் நாய்க் குட்டிகள் (வெள்ளை பூச்சி நீக்கியலை), புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி (பஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (33454)

இல. 455, ஸ்ரான்லி வீதியில், யாழ். மத்திய பஸ் நிலைய முன்பாக மூன்று அறைகளுடைய கடையும், கிணறு, மலசலகூடமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33430)

ஒரு மாதம் நிரம்பிய வெள்ளைநிற பொமனேரியன் நாய்க்குட்டிகளுர், அழகிய Lioncut குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 123, பருத்தித்துறை வீதி (இந்து விடுதி முன்பாக), நல்லூர், யாழ்ப்பாணம். (33439)

பிறிமா புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், நன்கு உக்கிய கோழி எரு விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி (Barக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (33453)

கோ(F)போம் பிறையர்ஸ், சில்வர் சில்ட் சொக்ஸ் வகைகள், பெனியன்கள், நூல் எலாஸ்டிக் வகைகள், யட்டிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், 303. காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (33334)

கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல, ஓடும் நிலையிலுள்ள ஒக்ஸ்போர்ட் கார் பற்றறியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு இல.48/1, முதலாம் ஒழுங்கை(ஜங்சரன் விளையாட்டுக்கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/9422]

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? மற்றும் எதுவானாலும் கேட்டுப் பாருங்கள்! தினமும் காலை 8-30—12-30. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: ஆனந்தா சோதிட நிலையம், ஸ்ரான்லி வீதி, ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக, யாழ்ப்பாணம். தினமும் பி.ப. 3-00—6-00வரை. (33465)

தேவை

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு போட்டோ பிரதி இயந்திரத்தை(Photo Copy Machine) இயக்குவதில் அனுபவமுள்ளஆண்கள் மட்டும் சுய விவரத்துடன் 5-11-94இற்கு முன் விண்ணப்பிக்கவும். 953, மே/பா உதயன். (சி/9525)

மணமகள் தேவை

இந்து, 31 வயது, உத்தரம் 1, உதயத்து செவ்வாய் Londonஇல் Computer Hard ware முடித்துவிட்டு நிரந்தர வீசாவுடன், நிரந்தர உத்தியோகத்தில் உள்ளவருக்கு அழகான, படித்த, உயரம் குறைந்த 1966 — 1970 இடையில் பிறந்த பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து வீசாவுடன் அழைத்துச் செல்லப்படுவர். இல. 709, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33459)

யாழ். இந்து, வயது 35, உயரம் 5' 2'', சைவபோசனம், புனர்பூசம் நட்சத்திரம், யாழ்ப்பாணம் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மகனுக்குப் பெற்றோர்பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர். தொழில்புரிபவர் விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடனும், சகல விவரங்களுடனும் தொடர்பு: இல. 710, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33473)

தவறிவிட்டது

ஏழாலைக்கும், திருநெல்வேலி தபால்பெட்டியடிக்கும் இடையில் 18-10-94 அன்று கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 7, தாழையடி லேன், திருநெல்வேலி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33475)

மில்க்வைற் சலவைத்தூள்

சீருடைகளுக்கும், அன்றாட துணிகளுக்கும் பளிச்சிடும் வெண்மையைத் தருவது மில்க்வைற் சலவைத்தூள். துரித சலவைக்கு ஏற்றது. வெற்றுப்பக்கற் 25க்கு ஒரு அப்பியாசக்கொப்பி. 100க்கு ஒரு கவர்ச்சியான கைலேஞ்சி வழங்கப்படும். 'மில்க்வைற்'. (சி 9424)

இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33359)

மணமக்களே!

உங்கள் திருமண அழைப்பிதழ்களை நீவிர் விரும்பும் டிசைன்களில் எண்ணம்போல் கெரிவு செய்திட உடன் வாரீர். ''ஆனந்தஸ்'' பொத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33366)

மிருதங்கம்

புதிய மிருதங்கங்கள் மற்றும் மிருதங்கம், தபேலா, டோல்கீ போன்றவற்றுக்குச் சிறந்த முறையில் மூட்டுப் போடுதல் ஆகியவற்றுக்கு நாடுங்கள், மிருதங்கத் தொழில்நுட்ப வியலாளர்; க. இராசநாயகம் 82/16, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, அரியாலை. (33401)

ஆண்டு - 3, 4, 5

ஆண்டு 3 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் (1996) மாதிரி வினாத்தாள் 23-10-94 ஞாயிறு வெளியிடப்படும். ஆண்டு4, ஆண்டு 5 மாணவர்களுக்கு 16-10-94 இல் வெளியிடப்பட்ட வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33472)

வாகனங்களை ஒப்படைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக். 23

விவசாய அமைச்சுக்குச் சொந்தமான மூன்று வாகனங்களை உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கும்படி விவசாய பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னி முன்னாள் விவசாய அமைச்சர் தர்மதாஸ பண்டா, முன்னாள் ராஜாங்க அமைச்சர் எச். ஜி. பி. நெல்சன் ஆகியோரைக் கேட்டுள்ளார்.

இதற்கிடையில் —

சில முன்னாள் அமைச்சர்களும் ராஜாங்க அமைச்சர்களும் இன்னும் தங்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை அரசிடம் ஒப்படைக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-6)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

சித்த மருத்துவ பிரிவிற்கு 1993/94 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமானிப் படிப்பிற்காக மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) 1992 ஏப்ரல், 1992, 1993 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியெய்தி மொத்த புள்ளிகள் 180க்கு குறையாது இருத்தல் வேண்டும்.

(ஆ) 1994 ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்.

30 — 11 — 1994 இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விவரங்களும், விண்ணப்பப் பத்திரமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 20/- செலுத்தி பற்றுச் சீட்டை, பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரிற்கு ரூபா 20/-க்கான காசுக்கட்டளை ஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் முகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய உறை ஒன்றினை அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசி திகதி 30-11-1994 ஆகும்.

- பதிவாளர்.

[சி-9416]

DIPLOMA IN NURSING

தாதியர் பயிற்சி நெறி

10 - 11 - 1994 இல் ஆரம்பமாகின்றன.

1. கல்வித் தகைமை க.பொ.த. (சாதாரணர்)
2. காலம் 6 மாதங்கள்
3. விசேட மருந்தியல், பார்மஸி பாடங்கள் உள்ளடக்கப்பட்டன.
4. வைத்தியசாலை செய்முறைப் பயிற்சி
5. மாவீரர், போராளிகள் குடும்பத்தவருக்கு இலவசக் கல்வி.

சாயி மருத்துவக் கல்லூரி

இல. 10, பருத்தித்துறை வீதி, (அரச தாதியர் பாடசாலை முன்பாக) யாழ். நகர்

[சி-9395]

வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிக மன்றத்தினரால் நடத்தப்படும் மருத்துவம் இதழ் வெளியீடும் ஆரம்ப மருந்தாளர் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கலும்

காலம்: **23 - 10 - 1994** ஞாயிறு

நேரம்: பிற்பகல் 3மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

நிகழ்ச்சி நிரல்கள்

பிற்பகல் **3-00** மணி — தேசியக் கொடியேற்றல்
திரு. சி. இளம்பரிதி
(யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)

பிற்பகல் **3-02** மணி — சங்கக் கொடியேற்றல்
திரு. க. மு. பத்மநாதன்
(சங்கச் செயலாளர், யாழ். மாவட்ட வணிக கழகங்களின் இணைய செயலாளர்)

பிற்பகல் **3-04** மணி — மங்கள விளக்கேற்றல்
★ திரு. எஸ். மனோச்
(கள மருத்துவ பொறுப்பாளர் த. வி. புலிகள்)
★ திரு. இ. இமையவன்
(யாழ். மாவட்ட தொழில் சங்கப் பொறுப்பாளர்)

பிற்பகல் **3-06** மணி — இறைவணக்கம்
கல்லூரி மாணவிகள்

பிற்பகல் **3-08** மணி — அமைதி வணக்கம்

பிற்பகல் **3-10** மணி — மங்கள இசை
திரு. எம். கே. பத்மநாதன் குழுவினர்

பிற்பகல் **3-40** மணி வரவேற்புரை
திரு. பா. லிங்கநாதன் (சங்கத் தலைவர்)

பிற்பகல் **3-42** மணி — சங்கீதம்
கல்லூரி மாணவிகள்

பிற்பகல் **3-44** மணி — ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

பிற்பகல் **3-50** மணி — சங்கத் தலைவர் உரை
திரு பா. லிங்கநாதன்

பிற்பகல் **3-55** மணி — நிகழ்ச்சித் தலைவர் உரை
பேராசிரியர் எஸ். வீ. பரமேஸ்வரன்
(மருத்துவ பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)

பிற்பகல் **4-00** மணி — வெளியிடுபவர் உரை
வைத்திய கலாநிதி ந. சிவராசா
(சமுதாய மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

பிற்பகல் **4-05** மணி — முதற் பிரதி பெறுநர் உரை
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்
(தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் த. வி. புலிகள்)

பிற்பகல் **4-10** மணி — பிரதம விருந்தினர் உரை
★ வைத்திய கலாநிதி வே. கருணாகரன்
(தலைவர், மருத்துவ சங்கம்)
★ வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன்
(பருத்திநகர்)
★ திரு. வே. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகர சபை ஆணையாளர்)
★ திரு. பா. தவபாலன்
(பிரசித்தி பெற்ற சட்டத்தரணி)

பிற்பகல் **4-35** மணி — சிறப்பு பிரதிகள் பெறுதல்

பிற்பகல் **5-05** மணி — வெளியீட்டுரை
வைத்திய கலாநிதி எஸ். பீ. ஆர். சீர்மாறன்
வைத்திய கலாநிதி க. சிவபாலன்
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
திரு. கே. ஜெயரெத்தினம்

பிற்பகல் **6-35** மணி — பதிலுரை
க. மு. பத்மநாதன்

பிற்பகல் **6-50** மணி — சான்றிதழ் வழங்கல்
வைத்திய கலாநிதி தா. அருள்
(துணைப் பொறுப்பாளர், மருத்துவ பிரிவு த. வி. புலிகள்)

பிற்பகல் **7-17** மணி — நன்றியுரை
திரு. பா. லிங்கநாதன்

அனைவரையும் வருக! வருக!! என இருகரம் கூப்பி அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:

இன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதென்பதை கவலையுடன் அறியத்தருகின்றோம்.

[சி-9524]

தனியார் கல்வி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணங்களுக்கு கற்கச் சென்றிருக்கத் தேவையில்லை. எனவே தமது வகுப்புமாணவனை தமது தனியார் கல்வி நிலைய வகுப்பில் அனுமதித்தல் ஆசிரியரின் தகாத தன்மையினைக் காட்டுகின்றது.

★ வகுப்பில் மாணவர் தொகையினைக் குறைத்தல். 30 பேருக்கு மேற்படாத வகுப்புகளே சிறந்தவை. ஆசிரியர் — மாணவர்களுக்கிடையேயான தொடர்பு, நல்ல உறவு முதலியவை கற்றலுக்கு தேவை என்பதனை எந்த நல்லாசிரியரும் அறிவர்.

★ தகுதி வாய்ந்த ஆசிரியரை மட்டும் கற்பித்தலுக்கு அமர்த்தல்.

★ பாடசாலைச் செயற்பாடுகளுக்கும், அறிவுறுத்தல்களுக்கும் மாறாகச் செயற்படாதிருத்தல். உதாரணமாக பாடசாலைகளில் நாம் செல்முறைக் கற்பித்தலை வலியுறுத்துகின்றோம். ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் செய்முறை அவசியமில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்துரைக்கின்றனர்.

★ பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின், தனியார் கல்வி நிலையக் கற்பித்தல் நேரத்தைக் கட்டுப்படுத்தல். ஒய்வின்றித் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை நாட்களில் லீவு எடுக்கின்றனர்; பாடசாலை வகுப்பிலும் சிலர் ஒய்வு எடுக்கின்றனர்.

★ தனியார் கல்வி நிறுவனங்களை பாடசாலைகளுடன் இணைத்து அவற்றின் குறை நிரப்பு நிறுவனங்களாக அவற்றைச் செயற்படுத்துதல்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மாணவனுக்கு மேலதிகக் கற்பித்தல் தேவைப்படும் போது தனிப்பட்ட முறையில் ஓர் ஆசிரியரிடம் கற்பதே சிறந்தது. இது சாத்தியப்படாத வேளையில் ஒரு சிலமாணவர்கள் ஒன்று சேர்ந்தால் ஓர் ஆசிரியரிடம் கற்கலாம். ★

ஈழமண்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்காட்சி நாள்களில் கலந்துரையாடல்களும், நடன, நாட்டிய, இசை நாடக நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இத்தகையதோரு பல்பொருள் தழுவிய பயனுள்ள கண்காட்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினரும் ஆணையாளர் திருடிவகலாலாவும் பாராட்டப்பட வேண்டியவர்களே. ★

சுழிபுரம் - பறாளாய்

ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

அமரர்

விநாயகர் பூஜா துரந்தரர், குருமணி, கிரியா வித்தகர் சிவாகம கிரியா ரத்தினம்

சிவஸ்ரீ கந்த,

சிவபாதசுந்தரக்குருக்கள்

அவர்களுக்குச் செலுத்தும்

ஆத்மார்த்த அஞ்சலி

கல்லைக் கதைக்கவைத்த கட்டுவன் கணேசப்பா
கல்லினிலே கடவுளைக் காட்டியதும் நீயப்பா
கல்லின் மகிமையினை உணரும் இவ்வேளையிலே
கல்லோடு கல்லாய் கலந்ததும் ஏனப்பா.....

இங்ஙனம்,

சோழியூரான்,

பிறைசூடிக்குரு,

(சந்ததிப் பூசகரும் ஒய்வுபெற்ற ஆசிரியரும்).

சோழியபுரம். [33476]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(23 — 10 — 1994)

அமரர்

அருணாசலம் ஆறுமுகம்

(தாய் - நாச்சிப்பிள்ளை)

மலர்வு: 13 — 04 — 1903 உதிர்வு: 23 — 09 — 1994

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஏழாலை வாசியும் ஆகிய திரு. அருணாசலம் ஆறுமுகம் அவர்கள் 23-09-94 இல் தேகவியோகம் எய்தியமை குறித்து அனுதாபம் தெரிவித்து, கலந்து கொண்ட யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்து இன்று ஏழாலையில் நடைபெற இருக்கும் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி - தில்லைவனம், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோட்டைக்காடு, ஏழாலை. (சி-5731)

குழந்தை யேசுவுக்கு நன்றி

அன்பான குழந்தை யேசுவே! எனது உடலில் ஏற்பட்ட அகோர நெருப்புக் காய்ச்சலால் மிகவும் கஷ்டப்பட்டு இருந்த வேளையில் அதுஎனது முதுகெலும்பையும் தாக்கி நடக்கவோ, நிற்கவோ, இருக்கவோ முடியாமல் கஷ்டப்பட்டு பல மாதங்கள் படுக்கையில் கிடந்தேன். நாம் உமது நவ நாள் செபத்தை நாளாந்தம் செபித்து நம்பிக்கையோடு வேண்டிக் கொண்ட போது உமது வல்லமையாலும் இரக்கத்தாலும் உமது திரு. இரத்தத்தின் மீட்கும் சக்தியாலும் புதுமையாக குணமாக்கியதற்கு மிக்க நன்றி கூறுகின்றோம்.

''நீ எத்துணை என்னை மகிமைப்படுத்துவாயோ நான் அத்துணை உன்னை ஆசீர்வதிப்பேன்'' என்ற உமது வாக்கிற் கொப்ப எனது நன்றியை பகிரங்கமாய் கூறுவதன் மூலம் உம்மை மகிமைப்படுத்துகிறேன்.

என்னை பராமரித்த வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கும், எனது நற்சுகத்திற்காக இறைவனை மன்றாடிய குருக்கள், அருட்சகோதரர், அருட்சகோதரிகள், மரியாயின் சேனையினர், பொது நிலையினர் அனைவருக்கும் எமது நன்றியையும் தெரிவிக்கின்றோம்

திருமதி யூலியானா பிறின்ஸ்

பாஷையூர்.

(7966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நூலக எரிப்பு: ஒரு சந்தேகம்

★ யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்க விசாரணை ஆணைக்குழு ஒன்றை புதிய அரசு நியமிக்கும்.

★ வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் யாழ். பொது நூலகத்தை திருத்தி அமைக்கும் பணி விரைவில் ஆரம்பமாகும்.

★ யாழ். பொது நூலக எரிப்பு உட்பட —அவ்வேளை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின் போது இடம் பெற்ற—சகல தேர்தல் வன்முறைகள் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஓர் அமைச்சர் பிரதமரைக் கோரியுள்ளார்.

இவை அனைத்தும் யாழ். பொது நூலகம் குறித்து அண்மையில் அடுத்தடுத்து வெளியான செய்திகள்.

யாழ். பொது நூலகம் குறித்து இவ்வாறு புதிய அரசுத் தரப்பிலிருந்து சிரத்தையுடன் கூடிய கருத்துகள் அடிக்கடி வெளிவருவது நிறைவைத் தந்தாலும் அதற்குப் பின்னால் ஒரு சந்தேகமும் இருக்கத்தான் செய்கிறது.

யாழ். மக்களுக்கு— ஈழத் தமிழர்களுக்கு— எதிராகப் புரியப்பட்ட—

ஸ்ரீலங்காப் படைகளால் மேற் கொள்ளப்பட்ட—

காடைத்தனமான— இப் பண்பாட்டுப் படுகொலை குறித்து புதிய அரசு உண்மையில் கவலை கொண்டுள்ளதா? அல்லது வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐ. தே. க. வேட்பாளரான காமினி திஸநாயக்காவுக்கு எதிரான ஒரு பிரசார ஆயுதமாக— தந்திரமாக — இதனைப் 'பயன்படுத்த அரசு விரும்புகிறதா? அதற்காக இச் சம்பவம் குறித்துஅரசு நீலிக் கண்ணீர் வடிக்கின்றதா?

யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்துடன் சேர்ந்து இடம் பெற்ற வன்செயல்கள் குறித்து இப்போது அரசுத்தூதராகப்புலிகளுடன் பேச்சு நடத்த யாழ். வந்த— வரவிருக்கின்ற — லயனல் பெர்னாண்டோவின் கீழ் தனி நபர் ஆணைக்குழு ஒன்றை முன்னைய அரசு நியமித்திருந்தது.

விசாரணையின் பின் அவர் வழங்கிய சிபார்சுப்படி 'ஈழ நாடு' பத்திரிகை நிறுவனம், யாழ் பஸ் நிலையக் கடைகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின்பணிமனை, அப்போதைய யாழ்.எம்.பியான யோகேஸ்வரனின் இல்லம் ஆகியவை எரிக்கப்பட்டதற்கு உரிய நஷ்டஈடு வழங்கப்பட்டது.

ஆனால் யாழ். பொது நூலகத்துக்கு வழங்குப்படி லயனல்பெர்னாண்டோ—அப்போது சிபார்சு செய்த ஒரு கோடி இரண்டு லட்சம் ரூபா நஷ்டஈடு இதுவரை வழங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக யாழ் பொது நூலக புனரமைப்புக்கான ஜனாதிபதி நிதியிலிருந்து 9 லட்சம் ரூபாவும், அந்த நிதிக்கு மக்கள் அளித்த பங்களிப்பாக 11 லட்சம் ரூபாவுமாக —ஆக 20 லட்சம் ரூபா மட்டுமே யாழ். பொது நூலகத்துக்கு வழங்கப்பட்டது.

புதிய அரசு தேர்தல் பிரசாரத்துக்காக மட்டுமல்லாமல், உண்மையில் யாழ்.நூலகம் எரிக்கப்பட்டது குறித்தும் கவலை கொண்டிருக்குமானால் மேற்படி லயனல் பெர்னாண்டோ ஆணைக்குழு செய்த சிபார்சுப்படி நஷ்ட ஈட்டுத் தொகையை யாழ். நூலகத்துக்கு வழங்கலாமே! அதற்கான அறிவிப்பையும் உடன் விடுக்கலாமே!

1982 இல் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்காக வடபகுதிக்கு வந்த அப்போதைய ஸ்ரீ. ல. சு. க. வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ, தான் ஜனாதிபதித் தேர்தலில் வென்றால் யாழ். பொது நூலகத்தை மீண்டும் கட்டித் தருவேன் என்றார்.

1986 இல் வரவு - செலவுத் திட்டம் மீது உரை நிகழ்த்திய ஸ்ரீ. ல. சு. கவின் எம்.பியான லக்ஷ்மன் ஜெயக்கொடி யாழ். பொது நூலகம் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பின்னர் இப்போதுதான் — ஜனாதிபதித் தேர்தல் வேளையில் — ஸ்ரீ. ல. சு. க. தலைமையிலான பொ. ஐ. மு. அரசுக்கு யாழ். பொது நூலகம் மீது திடீர் காதல் பிறந்திருப்பது போல் தெரிகிறது. ஆகவே சந்தேகத்தை நிவர்த்தி செய்வது அவர்களது கடமையாகும்.

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சு

மூன்றாம் கட்டத்துக்கும் நீண்டு செல்லும் சாத்தியம்?

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நாளை நடக்கிறது. கடந்த 13ஆம், 14ஆம் திகதிகளில் இடம்பெற்ற முதலாம் கட்டப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட அரசாங்கப் பிரதிநிதிகளே நாளையும் வருகிறார்கள். இம்முறை நடைபெறும் பேச்சில் அமைச்சர்கள் கலந்துகொள்வார்கள் என்று பரவலாகப் பேசப்பட்ட போதிலும், அந்தளவுக்கு நிலைமை இன்னும் முன்னேற்றம் அடைந்துவிடவில்லை.

அரசு - புலிகள் பேச்சுவார்த்தை இரண்டு பகுதிகளாக நடைபெறும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டது. ஒன்று அல்லது இரண்டு தடைகள், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட பகுதி — முதலாவது பகுதிக்குரிய — பேச்சுக்கள் இடம்பெற வாய்ப்புண்டு.

தமிழ் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது என்ற முதலாவது பகுதியில், போக்குவரத்துத் தடையை நீக்குதலும், போர் நிறுத்தம் கொண்டு வருதலும் அடங்கும். கடல் வலயத் தடையை நீக்குவதும் முதலாவது பகுதிக்கு உட்பட்டதே.

போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டால் தான் மக்களுக்குத் தேவையான பொருள்களை இங்கே கொண்டு வரவும், வடபகுதி மக்கள் பிறமாவட்டங்களுக்குச் சென்று தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றவும் வழிபிறக்கும். வெளியே இருந்து பொருள்களைக் கொண்டு வருவது மட்டுமன்றி தமிழ்ப் பிரதேச உற்பத்திகளை மாவட்டத்துக்கு மாவட்டம் எடுத்துச் செல்லவும் முடியும். எனவே போக்குவரத்துப் பாதையை திறப்பது என்பது முழுக்க முழுக்க மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டதே.

வடக்கு - கிழக்கில் போர் நிறுத்தம் கொண்டு வருவதும் மக்களின் அன்றாடப் பிரச்சினை சம்பந்தப்பட்டதே. மக்களின்வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு முக்கியம் தேவைப்படுவது. உயிர்ப் பயம் இன்றியும், அழிவுகள், அனர்த்தங்களின் ஏக்கமின்றியும், தமது தொழிலைப் பாதுகாப்புடன் செய்வதற்கும், மொத்தத்தில் நிம்மதியாக வாழ்வதற்கும் போர் இல்லாத சூழ்நிலை மிகவும் அவசியம். உணவு, வைத்தியம், போக்குவரத்து, தொழில் வளர்ச்சி, வர்த்தகம், மின்சாரம், தொலைத் தொடர்பு என்பனவற்றைப் போலவே பாதுகாப்பாக, நிம்மதியாக வாழ்வதற்கான அமைதிச் சூழ்நிலையும் அவசியம்.

அரசுக்குச் சங்கடம்

ஆனால் மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்ப்படுத்தும் போக்குவரத்துத் தடை நீக்கம், போர் நிறுத்தம் ஆகிய இரண்டிலும் அரசாங்கம் முடிவு ஒன்றைச் செய்ய முடியாத சங்கட நிலைக்குள் அகப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையோடு தொடர்புடைய அடிப்படை அம்சங்கள் அல்ல. எனினும் இவை இராணுவத்தோடு சம்பந்தமுடையவை என்பதால்இந்த இரண்டு விடயங்களிலும் சாதகமான

அரசியல்

முடிவை அரசு மேற்கொள்ள முடியாது திண்டாடுகிறது.

இந்தத் தடையை—முட்டுக்கட்டையை— தாண்டினால்தான் அரசியல் பிரச்சினையை—அடிப்படைப் பிரச்சினையை— தொடுமளவிற்கு சமாதான பேச்சு

போக்குவரத்துத் தடை நீக்கம் போர் நிறுத்தம் குறித்து முடிவில்லை

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளே முதலாவது பகுதியில் அடங்கும். தமிழ் மக்களின் சீர்குலைந்து போயுள்ள அன்றாட வாழ்க்கையை நிமிர்த்தி, தமிழ்ப் பகுதிகளில் இயல்பு வாழ்க்கையை உண்டாக்குவது தொடர்பான விடயங்களே முதல் பகுதியில் ஆராயப்படும். அப்போது இணக்கம் காணப்படும் அம்சங்களை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தி முதலில் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையைப் பேணுவதே முதல் பகுதி பேச்சின் நோக்கம். அதுவே இருசாராருக்கும் இடையேயான இணக்கமும் எனலாம்.

அந்த வகையிலேயே, முதலாவது கட்டப் பேச்சின் போது மக்களின் அத்தியாவசிய தேவைகள், அத்தியாவசிய சேவைகள் பற்றியே முற்றிலும் ஆராயப்பட்டது. மக்கள் தேவைகள், அவர்களுக்குரிய சேவைகள் குறித்து இருதரப்பினரும் விரிவாக ஆராய்ந்தனர். செயல்முறைச் சாத்தியங்கள் பற்றிக் கலந்தாலோசித்தனர். எனினும் அலை குறித்து முடிவு செய்வது, நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பது என்பன அரசாங்கத்தின்— அமைச்சர்களின்— அமைச்சரவையின்— அதிகாரத்துக்கு உட்பட்டவை என்பதால் பேச்சின் விவரத்தோடு அரசாங்கப் பிரதிநிதிகள் கொழும்பு சென்றார்கள்.

முடிவுகளோடு வருகிறார்கள்

இப்போது, இங்கு ஆராயப்பட்ட அம்சங்கள் சம்பந்தமான அரசின் முடிவுகள் என்ன, நடவடிக்கைகள் எப்படி அமையும் என்ற விவரத்தோடு அரசாங்கத் தூதுக்குழு நாளை இங்கு வருகிறது. நாளைய பேச்சோடு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்பந்தப்பட்ட ஆலோசனை முடிந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. மேலும் பேச்சுவார்த்தையை சில சந்தர்ப்பங்களில் சிலர் முறியடிக்கவும் முற்படலாம் என நினைப்பதில் தவறு இருக்காது என எண்ணுகிறேன் — என்று சந்திரிகா அந்தச் செவ்வியின் போது கூறியிருப்பது, போக்குவரத்துத் தடை நீக்கம், போர் நிறுத்தம் குறித்து இப்போதைக்குத் தன்னால் சாத்தியமான முடிவை மேற்கொள்ள முடியாதிருக்கிறது என்பதின் வெளிப்பாடே!

துணிச்சல் ஆபத்தாகலாம்

இன்னும் இரண்டு வாரங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கும் வேளையில், இராணுவத்துடன் முட்டிக்கொள்வதில் சந்திரிகா அவசரப்பட்டு விட்டார் என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. பொதுத் தேர்தல் முடிந்த கையோடு இராணுவத்தின் உதவியுடன் ஐ. தே. கட்சி, இராணுவச் சதிப் புரட்சி ஒன்றை நடத்த எத்தனித்ததாகத் தகவல்கள் வெளிவந்திருந்தன. அத்தகைய சூழ்நிலையில் இராணுவத்துடன் சந்திரிகா இப்போது அவசரப்பட்டு மோதிக் கொள்வது விவேகமல்ல என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. அவரின் அசட்டுத் துணிச்சல் ஆபத்தாகலாம் என்பதும் உண்மையே.

ஆகையால் அவர் வடபகுதி மக்கள் மீதான போக்குவரத்துத் தடையை நீக்குதல், போர் நிறுத்தத்தைச் செய்தல் ஆகிய இரண்டு விடயங்களிலும் ஆக்கபூர்வமான ஒரு முடிவுக்கு வருவது இப்போதைக்கு பெரிய அளவில் சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்குப் படையினர் முட்டுக்கட்டையாக இருக்கிறார்களே என்ற ஆத்திரத்தில் அவர் தமது கோபத்தை (வாயால்) வெளிப்படுத்திவிட்டார். அவர் கூறியது அத்தனையும் உண்மையே ஆனாலும், செயலளவில் படையினரை இப்போது— ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கும் வேளையில்— பகைத்துக் கொள்வது உகந்ததல்ல என்ற முடிவுக்கே வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, நாளை நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில், முன்னர் ஆராயப்பட்ட விடயங்கள் சம்பந்தமான முடிவுகளையும், அவற்றைச் செயற்படுத்தும் நடைமுறைத் திட்டங்களையும் மட்டுமே அரச பிரதிநிதிகள் வெளியிடுவர் என எதிர்பார்க்கலாம்.

யுத்த நிறுத்தம்; ஆராயப்படும்

வேண்டுமானால், பூநகரிப் பாதை திறப்பு, போர் நிறுத்தம் சம்பந்தமான விடுதலைத் புலிகளின் அபிப்பிராயங்களையும், நிலைப்பாட்டையும் விரிவாகக் கேட்டறிந்து திரட்டிச் செல்வர். இம்முறை நடக்கும் பேச்சில் யுத்த நிறுத்தம் குறித்து ஆராயப்படும் என்று அரச பிரதிநிதிகளில் ஒருவரான லயனல் பெர்னாண்டோ தெரிவித்திருப்பது இதனையே குறிக்கிறது. எனினும் அவை சம்பந்தமான தீர்க்கமான முடிவும், செயற்பாடுகளும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே உருப்படியாக நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

எனவே சமாதானப் பேச்சுவார்த்தையின் முதற்பகுதி — மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து இயல்பு நிலையை உருவாக்குவது சம்பந்தமான விடயங்கள் — தொடர்பாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே முழுமையாக ஆராயப்பட்டு முடிவு செய்யப்படும்.

ஆகையால் அரசு - புலிகளின் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை முன்னரைப் போல பத்து நாள் இடைவெளியில் நடக்காது. அனேகமாக அந்த இடைவெளி இருபது நாள்களுக்கு மேலாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. படையினருடன் செயலளவிலும் மோதி, ஜனாதிபதித் தேர்தலில் ஆபத்தை (Risk) 'வாங்குவது' என்று சந்திரிகா முடிவு செய்தால் மட்டுமே, மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் மேலே கூறிய இடைவெளிக்கு முன்னர் நடக்க வாய்ப்புண்டு.

சந்திரிகா அரசியலுக்குப் புதியவர். அதனால் இளம் கன்று பயம் அறியாது என்ற நிலையில் தமது துணிச்சலை செயலளவிலும் காட்டினால், நிச்சயமாக இலங்கை அரசியலில் வரலாற்றில் ஒரு சாதனை படைப்பார். அவர் அந்தச் சாதனையைப் புரிவதற்கு மனங்கொண்டுள்ளாரா அதற்கான மனப்பலம் இருக்கிறதா என்பது நாளை மாலை தெரிந்து விடும். அதுவரை பொறுத்திருப்போமே.

உதயகாந்தன்

★ ★ ★

ஒற்றையாட்சி சமஷ்டி கூட்டாட்சி

முதல் பகுதிக்குரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பதற்கு முன்னர் இரண்டாம் பகுதிக்குரிய — அரசியல் பிரச்சினை — அடிப்படைப் பிரச்சினை குறித்து இப்போது இன்னும் தகவல் இல்லை...!

மக்களின் பொறுப்பு

ஆனால் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் எந்தக் கட்டத்திலும் தோல்வி அடையக்கூடாது என்பதை அவர் அண்மையில் வலியுறுத்தி இருக்கிறார்.

ரூபவாஹினியில் கடந்த மாதம் 25ஆம் திகதி நடந்த தொலைக்காட்சி விவாதத்தில் அவர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:—

பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் அது இந்த நாட்டின் சகல மக்களினதும் துரதிர்ஷ்டமாகவே இருக்கும். அதன் விளைவுகளை எண்ணிப்பார்க்க முடியாது. போரில் ஈடுபட்டுள்ள தரப்பினரைவிட, போரில் ஈடுபடாத தரப்பினரான இந்நாட்டு மக்களே யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இராணுவத்தினரையும், விடுதலைப் புலிகளையும்விட இந்நாட்டு மக்களுக்கே மிகப் பெரும் பொறுப்பு உண்டு. அந்த வகையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, போரை முடிவுக்குக் கொண்டு வருவதில், மக்கள் தமக்குரிய பங்கை வகித்தே தீருவார்கள் என நம்புகிறேன்— என்று தெரிவித்தார்.

இராணுவத்துடன் செயலால் மோதும் மனோபலம் சந்திரிகாவுக்கு உண்டா?

பிரச்சினை குறித்து அனுமானிப்பது, ஊகிப்பது பொருத்தமல்ல. எனினும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்களன்று பி. பி. ஸிக்கு வழங்கிய செவ்வியில் இனப் பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வுக்கு தாம் உத்தேசித்துள்ள திட்டத்தின் அடித்தளத்தை லேசாகத் தொட்டிருக்கிறார்.

இனப் பிரச்சினைக்கு அரசாங்கம் முன் வைக்க இருக்கும் தீர்வு ஒற்றையாட்சி (Unitary) முறையை விடுத்து ஒன்றுபட்ட (Unified) நிலையைக் கொண்டிருக்கும். அது சமஷ்டியா அல்லது வேறு அமைப்பா என்பது அரசியல் மட்டப் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டு, விவாதிக்கப்பட்டு, தீர்மானிக்கப்படும் — என்று பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

அதிகாரப் பரவலாக்கலின் அலகு என்ன என்பது எங்களினதும் புலிகளினதும் அரசியல் தலைவர்கள் கூடிப் பேசும் போது தீர்மானிக்கப்படும் — என்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

தமிழீழத்துக்கு மாற்றீடான அதனை அண்டிய தீர்வாக,-

தமிழர் அரசு தனியாகவும், ஸ்ரீலங்கா அரசு தனியாகவும் இயங்கி கூட்டாட்சி (Confedaration) முறையைக் கொண்டு வரலாம் என்பது சிங்கள புத்திஜீவிகள் சிலரது ஆலோசனையாக முன்னர் இருந்தது.

குறிப்பாக கலாநிதி ஜெயதேவ உயங்கொடை, இனப் பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு செயற்பட்ட காலத்தில் இக்கருத்தை முன் வைத்திருந்தார். திரு. விக்டர் ஐவன், திரு. வசந்த ராஜா போலவே கலாநிதி உயங்கொடவும் பிரதமர் சந்திரிகாவுக்கு நெருக்கமானவர். அவர் தமது முந்திய ஆலோசனையை இப்போதும் கொண்டிருக்கிறாரா என்பது தமது சொந்த மண்ணில் தமக்கென தன்னாட்சி அதிகாரம் வேண்டும், தங்கள் இறைமையும் சுதந்திரமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை. அது நியாயமானது என்பதை எவரும் மறுக்க முடியாது. அதற்கு நிகரான ஒரு தீர்வையே தமிழர்கள் விரும்புகிறார்கள். இதனை சிங்கள மக்களுக்கு நன்கு புகட்ட வேண்டும். அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கை உருவாக்க வேண்டும்.

சமாதானம் என்ன விலைக்கு?

இது விடயத்தில் பிரதமரும் அவரது சகபாடிகளும், ஆலோசகர்களும், அபிமானிகளும் கவனமெடுப்பது அவசியம். இல்லையேல் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தெற்கில் வெளிவந்துள்ள —

வடக்கும் கிழக்கும் — தமிழருக்கு; துறைமுகம் — முஸ்லிம்களுக்கு. பானும் பருப்பும் — சிங்களவருக்கு; —

என்பன போன்ற சுவரொட்டிகளை ஒத்த கோஷங்களை சிங்கள மக்கள் ஆதரிக்காத, அவற்றால் கவரப்படாத நிலையை உருவாக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை தோல்வி அடையாமல் இருக்க, தமிழர் பிரச்சினை தீர இத்தகைய நிலை அவசியம். அரசு இதிலும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

அதனைச் செய்யாது—

தமிழீழத்துக்குப் பதிலாக ஏதோ ஓர் அதிகாரப் பகிர்வு அலகைக் கொடுத்துப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என்று நினைக்கக் கூடாது.

தமிழர்கள் சமாதானத்தை ஆரக் கட்டித் தழுவத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதனை என்ன விலை கொடுத்தும் வாங்குவார்கள் என்று மதிப்பிட்டு விடக்கூடாது!

தமிழருக்கு சமாதானம் என்ன விலைக்கு?

கல்விச் செயற்பாடுகள் மாணவரின் தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும்

கோப்பாய் கிறீஸ் தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கோப்பாய்க் கல்விக் கோட்ட ஆசிரியர் தின விழாவில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. சின்னதம்பி நிகழ்த்திய உரையின் சுருக்கத்தை இங்கே தருகின்றோம்.

"மாணவர்களின் உள, உடல் ரீதியிலான தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக கல்விச் செயற்பாடுகள் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். பரீட்சையை மட்டும் நோக்காக வைத்து பெற்றோர் — ஆசிரியர்களின் விருப்பங்கள் தேவைகளை மாணவர் மீது திணிப்பது எதிர்பாராத தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்கால கல்விச்செயற்பாடுகள் அதிகரித்துள்ள போதிலும் 1984ஆம் ஆண்டிற்கு பின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் 40 சத வீதத்திற்கு குறைவான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

10 வருடங்கள் தொடர்ந்து கல்வி கற்ற பின்பும் தாய் மொழியில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் கூட்டம் உள்ளது.

5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் உயர்சித்தி பெற்ற மாணவர்கள் கூட ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சையில் சித்தியடையாத நிலை உள்ளது. ஜி. சீ. ஈ. சாதாரண தரத்தில் கல்வி கற்றவர்களில் 20 வீத மாணவர்கள் மட்டும் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கிறார்கள். 80 வீதமான வர்கள் தகுதி அடையாமல் கல்விக்கு முழுக்குப் போடுகிறார்கள்.

இவையெல்லாம் ஏதனால் வந்தது என்பதை ஆராய்ந்து பெற்றோர், கல்வியாளர்கள் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

மாணவர்கள் தங்களின் பெரும் பங்கு நேரத்தை பாடசாலை, தனியார் கல்வி நிலையங்கள் என அலைந்து கல்விக்காக பெருந்தொகை பணத்தையும் நேரத்தையும் செலவு செய்கின்றனர். ஆனால் கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்து செல்கின்றது.

மாணவர்கள் தமது பாடசாலையில்- ஆசிரியர்களில் நம்பிக்கைகொள்ளவேண்டும்; ஆசிரியர்களும் தமது கடமைப் பொறுப்புக்களை உணர்ந்து கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும்.

பரீட்சையில் தோல்வி அடைந்தால் பாடசாலைகள் மீதும் சித்தியடைந்தால் தனியார் கல்வி நிலையங்கள் மீது பொறுப்புக்களை சுமத்துவதும், பரீட்சைப் பெறுபேறுகளை பத்திரிகைகளில் விளம்பரம் செய்து மாணவர்களை [illegible] செயற்படுகிறார்கள். அதுவே [illegible] கருத்தில் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் நேரத்தோடு அணியாக இருந்து போட்டியிட்ட இ.தொ.கா. பின்னர் நாடாளுமன்றத்தில் தனிக்குழுவாக இருந்து செயற்பட அனுமதிக்கப் பட்டிருந்தது. சபாநாயகர் இதற்கான அனுமதியை வழங்கியிருந்தார்.

6 அம்ச கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று தீர்மானிப்பதற்கு முன்பதாக திரு. தொண்டமான் பொ. ஐ. முன்னணிக்கும், ஐ. தே. கட்சிக்கும் 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொள்ளும் கட்சியை ஜனாதிபதித் தேர்தலில் இ. தொ. கா. ஆதரிக்கும் என்றும் அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த ஆறுஅம்சக் கோரிக்கையை பொ.ஐ.முன்னணியும், ஐ. தே. கட்சியும் ஏற்றுக்கொண்டன என்ற தகவலை திரு. பி. பி. தேவராஜ் நேற்று வெளியிட்டார்.

இ. தொ. காவின் நிர்வாக சபை கூடந்த வெள்ளிக்கிழமை கூடி ஜனாதிபதித் தேர்தல் நிலவரம் பற்றி ஆராய்ந்தது.

இறுதியில் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்யும் பொறுப்பை தலைவர் தொண்டமானிடம் ஒப்படைப்பதென நிர்வாகசபை முடிவு செய்தது. அதன்பின்னர் இந்த முடிவைத் திரு. தொண்டமானே எடுத்தார்.

தொண்டமான் தலைமையிலான இ. தொ. காவின் இந்த முடிவு சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றங்களைத் தெளிவாகப் பிரதிபலிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டிருப்பதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொ. ஐ. மு. அரசு எடுத்துள்ள முயற்சிகளை இ. தொ. கா. வரவேற்றிருப்பது தெரிந்ததே

(இ-எ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமிலிருந்து சுமார் ஐந்நூறு யார் தூரத்தில் வைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் பொலீஸ் அதிரடிப் படையினர் இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஆறு ஷெல்கள் போடக் கூடிய 38 ரக டொங்கான் ஒன்றையும், மற்றும் ஷெல்கள் 5, கோல் கொமாண்டோ ஒன்று, மகளீன் ஒன்று, 5 56 ரவைகள் 20 என்பவற்றையும் இத்தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றினர்

விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதலை கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. (ஐ-4)

ஆன்மார்த்த அஞ்சலி

அடியேனுக்கு அன்பும், அறனும் அறிவும் பெருக்கி, ஆச்சாரியதீட்சை கொடுத்துச், சிறந்த சிவாச்சாரியார் ஆக்கிய எனது ஆன்மார்த்தகுரு சிவஸ்ரீ க. சிவபாத சுந்தரக் குருக்கள் அவர்கட்கு எம் இதயம் கனிந்த அஞ்சலியைச் செலுத்தி, ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினர்க்கு எம் அனுதாபச் செய்தியைச் செலுத்து கின்றோம்.

சிஷ்யன்:
சிவஸ்ரீ. தியாக. சோமாஸ் கந்தராஜாக் குருக்கள்
ஆசிரியர், நெ. ப. அம்மன் பிரதமகுரு

(33486)

மரண அறிவித்தல்கள்

திருமதி பிரீடா ஸ்ரிபன்ஸ்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பிரீடா ஸ்ரிபன்ஸ் காலமானார் அன்னார் திரு. ஜோர்ஜ் ஸ்ரிபன்ஸ்அவர்களின் Rtd. Asst.Commissioner Marketing Dept.) அன்பு மனைவியாவார். அன்னாரது அடக்க ஆராதனை திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி றெஜீனா ஸ்ரிபன்ஸ் [மருமகள்]
லவ் லேன், உடுவில். (33479)

சுப்பிரமணியம் நிமலன் (பாபு)

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி, இராமலிங்கம் வீதியைப்பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் மீனலோஜனி தம்பதிகளின் மூத்த புதல்வன் நிமலன் கனடாவில் 15-10-1994 இல் அகாலமரணமானார்.

இவர் நிருஷா, பிரசன்னா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற முத்துலிங்கம், தனபாக்கியம் அவர்களின் பேரனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-10-1994 கனடாவில் நடைபெற்றது. உறவினர்கள் நண்பர்கள் இதனை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
க. இராசரத்தினம் (சித்தப்பா)
"யோகவாசா" அரசடி வீதி, புலோலி, கிழக்கு, பருத்தித்துறை. (33477)

திருமதி இரத்தினம்மா பொன்னுத்துரை

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினம்மா பொன்னுத்துரை நேற்று சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், திருமதி. பாக்கியத்தின் அன்புச் சகோதரியும், மங்கயர்க்கரசி, துரைரத்தினம் (கார் புறோக்கர்), சுந்தரலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ்), இராசரத்தினம் (லிங்கம் ஸ்ரோர்ஸ் சங்கானை), பாலசிங்கம் (இலங்கை வங்கி மானிப்பாய்), செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், வைரவநாதன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - புகையிரதப் பகுதி), கமலாதேவி, பத்மாதேவி, கமலாதேவி, விஜயலட்சுமி, சிவகுமரன் (சாறி ஹவுஸ் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், முரளி(கனடா), ரமணன் (கனடா), வசந்தன்(கனடா) விபுலன், தர்ஜினி (தொழிநுட்ப கல்லூரி - N. C. A. T. I.), பிரதீபன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி வர்த்தக பிரிவு), துவாரகா, சுகிர்தினி, சுசிபன், சுதர்சன், சுமணன், நிரோஜன், பிரகாஸ், பாமினி, மயூரன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-10-94) ஞாயிறு பி. ப. 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
பொ. பாலசிங்கம்
பொ. சுந்தரலிங்கம் (மக்கள்)
பாரதி லேன், சங்கானை. (33483)

திருமதி சின்னப்பிள்ளை தர்மலிங்கம்

கே.கே.எஸ். வீதி, இணுவிலைச் சேர்ந்த திருமதி சின்னப்பிள்ளை தர்மலிங்கம் நேற்று 22-10-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி கண்மணி கனகரத்தினம் காலஞ்சென்ற நடராசாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகரத்தினம், திருமதி இ. நடராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், மகேந்திரராசா (ஆசிரியர், உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை), பிரபா (பிரான்ஸ்), சோதிராசா (பிரான்ஸ்), தவராசா, தர்மசீலன் (பிரான்ஸ்), தாரணி, மயூரினி, தர்மினி, ஜெயசீலன், குணசீலன், கனகேஸ்வரன் (பிரான்ஸ்), உமாநிதி (பிரான்ஸ்), திருமதி ந. மகேந்திரராஜா (ஆசிரியை, மானிப்பாய் புனித ஆன்ஸ் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டர்ஷா, விதுர்ஷா, சஜீவன், கபிலன், அனந்தன், நிராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
க. மகேந்திரராஜா (பேரன்)
கே. கே. எஸ். றோட், இணுவில். (33487)

குடும்ப....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையிலும் குடும்ப ஆலோசகர்கள் உறுதிப் பிரமாணம்எடுத்துக் கொண்டார்கள்.

தொடர்ந்து இவ் வைபவத்தில் நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. இ. பராராஜசிங்கம், அரசியல்துறையைச் சேர்ந்த வே. பாலகுமாரன், சட்டத்தரணி திரு. முத்துக்கிருஸ்ணன் ஆகியோர் உரையாற்றினார்கள். (இ)

புலிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவரான திரு. லயனல் பொன்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இத்தகவலை "புலிகளின் குரல்" வானொலி வெளியிட்டது.

பேச்சுவார்த்தை நடந்த மண்டபத்தில் தமிழீழக்கொடி வைக்கப்பட்டிருந்ததை "த ஐலண்ட்" பத்திரிகை கண்டித்திருந்தது தெரிந்ததே

வடக்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பினருக்கும் மிகுந்த விருப்பமும், திடசங்கற்பமும் இருப்பதை என்னால் உணரமுடிகிறது. ஆகையால் இப் பேச்சுவார்த்தைகள் வெற்றியில் முடியும் எனநம்பு இடமுண்டு.

சுவிஸிலும், ஜேர்மனியிலும் பெரும் எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தை குறித்து மிகுந்த அக்கறையுடன் இருக்கிறார்கள்—என்று கூறினார்.

ராணுவத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பைப் பெறுவதில் அரசு சிக்கலை எதிர்நோக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரிடையே தோன்றியுள்ள உணர்வலைகள் தொடர்பாக எல்மோ பொன்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் இராணுவத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்ற கருத்தே பொதுவாக இராணுவத்தினர் மத்தியில் உள்ளது.

இராணுவத்தில் லாபம் பெற்ற தளபதிகள் உள்ளனர். அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, சேவையில் இருந்து அவர்களை நீக்கவேண்டும். இதைவிடுத்து படையினர் அனைவர் மீதும் குற்றம் சுமத்துவதை அவர்கள் விரும்பவில்லை.

கொலைச் சம்பவங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் மிகச் சிலரே என்றும் — அவர்கள் தண்டிக்கப்படுவதில் தவறில்லை என்றும் இராணுவத்தினர் கருதுகின்றனர்.

ஆனால் சிரேஷ்ட அதிகாரிகளும், சாதாரண சிப்பாய்களும் ஒன்றாக விலங்கிடப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவது பொதுமக்கள் மத்தியில் இராணுவத்தினர் மீதுள்ள மதிப்பையும், நம்பிக்கையையும் பாதிக்கும் என்றே சாதாரண சிப்பாய்கள் அங்கலாய்க்கின்றனர்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-ஐ-6)

ஆயுதக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றவையாகும். ஆயுதம் இருந்தும் ஆயுதம் இல்லாத நிலையில் எமது படையினர் போர்முனையில் கொல்லப்பட்டிருப்பர்.

வடக்கு — கிழக்கு யுத்தம் சிங்கள பௌத்தர்களைப் பாதுகாப்பதற்காக நடத்தப்படுகிறது என்று சில பத்திரிகைகள் கூறுகின்றன.

சிங்கள பௌத்த இளைஞர்களின் உயிர்களைப் பலி கொடுத்து சிலர் பணக்காரராக வருவதற்கே இந்த யுத்தம் நடத்தப்படுகின்றது என்று நான் கூறுவேன்.

இவ்வாறு பிரதமர் மேலும் கூறினார். (ஐ-எ)

ரூ.5½ கோடி லஞ்சம் வழங்க முயற்சி:

பிரதமரின் முறைப்பாடு குறித்து லஞ்சத் தினைக்களம் விசாரிக்கும்

கொழும்பு, ஒக். 23

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு ரூ. 5 கோடியே 50 லட்சம் லஞ்சமாகக் கொடுக்க முயற்சித்த சம்பவம் தொடர்பாக லஞ்சத் தினைக்களம் விசாரணை நடத்த உள்ளது.

பிரதமரின் முறைப்பாட்டை விசாரிக்க தனியான கோவை ஒன்றை லஞ்சத்தினைக்களம் திறந்திருப்பதாக தினைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தமக்கு 5 கோடி 50 லட்சம் ரூபா லஞ்சமாக கொடுக்க முயற்சித்த சம்பவம் குறித்து பிரதமர் சந்திரிகா குமாரதுங்க லஞ்சத்தினைக்களத்திடம் முறையிட்டிருந்தார்.

ஐ. தே. க. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இரண்டு ரென்டர்களை புதிதாக பதவிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இரத்துச் செய்துவிட்டது.

மீண்டும் அந்த ரென்டர்களைப் பெற்றுக் கொள்ளவே அது தொடர்பானவர்கள் பிரதமருக்கே லஞ்சம் கொடுக்க முன்வந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு ரென்டருக்காக 5 கோடி ரூபாவும் மற்ற ரென்டரின் சார்பாக 50 லட்சம் ரூபாவும் பிரதமருக்கு வழங்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்தனர் என்று கூறப்படுகிறது.

இது பற்றி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் பிரதமர் சந்திரிகா லஞ்சத் தினைக்களத்தைக் கேட்டிருந்தார். (இ-எ)

பம்பலப்பிட்டி பகுதியில் தமிழ் வர்த்தகர் கடத்தல்

கொழும்பு, ஒக். 23

பம்பலப்பிட்டி காசில் வீதியில் உள்ள 'லொட்ஜ்' ஒன்றின் உரிமையாளரும், பிரபல வர்த்தகருமான ஐ. சிவப்பிரகாசம், என்பவர் கடந்த 14 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

அதிகாலை 5-30 மணியளவில் ஜீப் ஒன்றில் வந்தவர்கள் விசாரணைக்காக இவரை வீட்டிலிந்து வெளியே அழைத்து ஜீப்பில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

ஜீப்பில் வந்த நபர்கள் இராணுவ உடை அணிந்திருந்தனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட இவர் அன்று மாலை தொலைபேசியில் தனது மனைவியுடன் பேசியுள்ளார்.

"என்னை விடமாட்டார்கள் போல் தெரிகிறது. 50 லட்சம் ரூபா தந்தால் விடுவதாகக் கூறுகிறார்கள்" என்று மனைவியிடம் அவர் தெரிவித்தாராம்.

இது தொடர்பாக அவரது மனைவி பொலீஸில் முறையிட்டுள்ளார். பிரஸ்தாப வர்த்தகர் வடபகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

பருத்தித்துறை துறைமுகத்தில்

இரு கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டன

வடமராட்சி, ஒக். 23

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று இரு கப்பல்களில் இருந்து ஒரே சமயத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

ஏற்கனவே பருத்தித்துறைக்குவந்துள்ள 'மாஹோ' கப்பலில் இருந்தும், சுமார் 3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் நேற்று வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் இருந்துமே ஒரே நேரத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

'கோமாரி' கப்பலில் இருந்து இறக்கப்பட்ட மா மூடைகள் உடனடியாக அங்கிருந்து ப. நோ. கூ. சங்கங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-173-17-4)

குளத்தில் மூழ்கி இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை சின்னக்குளத்தில் இருந்து மீட்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் காவல் துறையினரால் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

குளத்தில் குளித்தவேளை இவர் நீரில் மூழ்கி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நந்தன் என்று அழைக்கப்படும் 16 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞர் சித்த சுவாதீனமற்றவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15-17)

போட்டியிலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி மொழி அளிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை ஆகும்.

நிஹால் கலபதியின் முதலாவது நிபந்தனைக்குப் பதில் அளித்த பிரதமர் சந்திரிகா, நிறைவேற்று ஜனாதிபதி முறை அடுத்த வருடம் ஜூலை 15 இல் ஒழிக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்தார்.

கலபதியின் இரண்டாவது நிபந்தனை குறித்து பிரதமர் இன்னும் கருத்துத் தெரிவிக்கவில்லை. (இ)

எல்மோவுக்கு விருது

கொழும்பு, ஒக். 23

1994 ஆம் ஆண்டுக்கான சிறந்த வானொலிச் செய்தித் தயாரிப்பாளருக்கான "உண்டா அபிநந்த" விருது பி.பி.ஸி. சிங்கள சேவையின் கொழும்புச் செய்தியாளர் திரு. எல்மோ பொன்னாண்டோவுக்கு வழங்கப் பட்டுள்ளது. (ஐ-3)

விளையாட்டு நிகழ்வு

நல்லூர் பிரதேச செயலகம் சக பிரதேச செயலகங்களுக்கும் இடையே நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று (ஞாயிறு) பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான அரையிறுதி ஆட்டங்களில் நல்லூர் பி.செ. அணியை எதிர்த்து கரவெட்டி பி.செ. அணியும்—

செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பி.செ. அணியும் இன்று போட்டியிட உள்ளன.

இன்றைய போட்டிகளுக்கு நல்லூர் பிரதேசச் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டுப் பொறுப்பு அதிகாரி திரு. சி. தியாகராஜா கலந்து கொள்வார். (ஐ)

6 முன்னாள்எம்.பிக்களுக்கு எதிராக லஞ்ச வழக்குகள்

கொழும்பு, ஒக். 23

ஆறு முன்னாள் எம். பிக்களுக்கு எதிராக லஞ்ச வழக்குகளைத் தாக்கல் செய்ய லஞ்சத் தினைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக லஞ்ச ஆணையாளர் சபாநாயகரின் அனுமதியைக் கோரியிருக்கிறார். (ஐ-எ)

மலிவு விற்பனை

திருமாட்டி (சீமாட்டி) புடைவைக்கடல்

மாபெரும் தீபாவளி

மலிவு விற்பனை

ஓர் அரிய வாய்ப்பு!

எமது இனிய வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இன்றும் என்றும் இல்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்!!

மங்களகரமான தீபாவளித் தினத்தை முன்னிட்டு அனைத்து ஜவுளித் தினுசுகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன!!!

உங்கள் தேர்வுக்கு இன்றே முந்துங்கள்!

தலை நகரில் சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஒரே ஸ்தாபனம்:

திருமாட்டி புடைவைக் கடல்

(சீமாட்டி)

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[சி-9526]

அகில இலங்கை சைவக்குருமார் பேரவையின் ஆன்மார்த்த அஞ்சலியும் பிரார்த்தனையும்

அமரர்

சிவஸ்ரீ கந்தையாஐயர் சிவபாதசுந்தரக் குருக்கள்

அவர்கள்

(கணேசய்யா)

21-10-1994 அன்று சிவத்துவம் எய்தினார்.

குருக்கள் ஐயா அவர்கள் நன்முயற்சியும், தளராத மனவுறுதியும் கொண்டு சைவக்குருமார் உலகில் இணையில்லா மகத்துவம் நிறைந்த வாழ்க்கையை எய்தினார். அறிவு, ஆற்றல், திறன், மனப்பாங்கு அத்தனையும் நிரம்பிய கல்விமான் அறிவுசால் ஒழுக்கம் மிகக ஆன்மீகம் வளர்க்கும் பலசைவச் குருமார்களை, உருவாக்கி உலகம் உய்ய உழைத்துள்ளார்கள்.

பல ஆகம நூல்களையும் துறைபோகக்கற்றவர். தமிழ் வேதத்திரட்டு, முத்திராலட்சணவிதி, விவாகக் கிரியை விளக்கம், அபரக்கிரியை விளக்கம், கும்பாபிசேக தத்துவம், மகோற்சவ விளக்கம், வீரபத்திரக்கடவுள், கேதாரகௌரி விரதம், சனிபகவான் வழிபாடு, திருவிளக்கு வழிபாடு, கட்டுவன் ஸ்ரீ. முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிசேக மலர் ஆகிய சிறந்த நூல்கள் பலவற்றை யாத்தோன் என்ற பெருமை மிக்கவர். கிரியானுபவமுதிர்வுடையவர். அன்னாரின் சிவபதம் சைவ உலகிற்கு பேரிழப்பாகும். அவரின் இலட்சியம் உய்க்கும் வகையில் எல்லாச் சைவக்குருவுலகமும் ஈடேற வழிகாணவேண்டும் என சங்கல்பம் செய்துய்வோம்.

சைவம் மேன்மைகொண்டு, உலகம் உய்வு பெற, இறைவனைப் பிரார்த்திப்போம். அன்னாரின் குடும்பத்தினர்க்கும், பிரிவால் வாடும் அனைத்து சைவ குருமார்களுக்கும், சைவ அபிமானிகளுக்கும், அகில இலங்கை சைவக்குருமார் பேரவையின் சார்பில் ஆன்மார்த்த அஞ்சலியைச் செலுத்தி, ஆன்மா சிவப்பேறு அடைய இறைவனிடம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தலைவர், செயலாளர்
உறுப்பினர்கள்.

அகில இலங்கை சைவக் குருமார் பேரவை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம். (33485)

வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கம்

★ பற்சிகிச்சை நிலையம் ★

"பிலிப்ஸ்" நேர்சிங் ஹோம், இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

எமது நிலையத்தில் குறைந்த கட்டணத்தில் சகல பல் வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். அத்துடன் பல் அடைத்தல், பல் கட்டுதல் போன்ற விடயங்களும் நடைபெறுகின்றன.

சிகிச்சை அளிக்கப்படும் நாட்கள்

வாரந்தோறும் வியாழக்கிழமை பிற்பகல் 3-00மணி தொடக்கம் 5-00 மணிவரை,
ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் 1-00 மணி வரை நடைபெறும்.

வ. மா. பு. து. சங்கம், — தலைவர.

[சி 9425]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி,292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23—10—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org